www.tamilarangam.net

விலை ரூபா 10.00

தமிழீழ மக்கள் கட்சியின் அரசியல் ஏடு

# தமிழீழம்

மக்களுக்கே அனைத்து அதிகாரங்களும்

புரட்டாதி 2000

இதழ் -18

**"...நம்ம சனங்களின் ரெத்தத்தையும் சடலங்களையும் ஏட்டிக்கடந்து வாக்குப் போட நாம் போகலாமர்...?"**

## ஓரணி திரண்டு தேர்தலை
# நிராகரிப்போம்!



சிறிலங்கா அரசு தனது சிங்கள சட்டமன்றத்தை (பாராளுமன்றை) அமைக்க மற்றுமொரு தேர்தலை நடாத்தவுள்ளது. முற்றிலும் நம்தேசநலன்களுக்கு எதிராக செயற்பட்டு வரும் சிறிலங்கா அரசானது, தனக்கான ஒரு சாதனத்தை அமைக்க இத்தேர்தலை நாடாத்துகின்றது. ஈழத்தமிழர்களுடைய அரசியல் அபிலாசைகளையும் தேசிய இருப்பையும் மறுக்கின்ற, படிப்படியாக அழித்தொழிப்பு செய்து வருகின்ற சிறிலங்கா அரசானது நடாத்தும் இந்த தேர்தல் தொடர்பான நமது தேசத்தின் நிலை என்ன? தற்போதுள்ள போராட்ட சூழலில் இத்தேர்தலில் ஈழத்தமிழராகிய நாம் பங்குபற்றுவதும் வாக்களிப்பதும் நமது விடுதலைப் போராட்டத்தின் திசையில் எந்தவித பாதிப்புகளை ஏற்படுத்தும்?

இந்தக் கேள்விகளுக்கான விடைகளைக் காண்பதும் இதனை நாம் ஒரு அடக்கப்படும் தேசம் என்ற வகையில் எவ்வாறு எதிர்கொள்வது என்பது ஒரு தீர்க்கமான அம்சமாகும்.

1977 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலை - அப்போது தமிழீழம் என்ற அரசியல் கோரிக்கையானது தடைசெய்யப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அரசியல் யாப்பில் இக்கோரிக்கையை தடைசெய்யும் 6 வது திருத்தம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை - ஒரு சர்வசன வாக்கெடுப்பாக எடுத்துக்கொண்டு, நமது தேசம் தமிழீழ குடியரசு அமைக்கும் இலட்சியத்திற்கு வாக்களித்தது. தமிழீழ குடியரசிற்கான அவசியமும் அதற்கான காரணங்களையும் அனுபவத்திற்கு ஊடாக அன்றைய நிலைமையை விட ஆயிரம் மடங்கு அதிகமாக இப்போது நாம் கொண்டுள்ளோம். மேலும், இன்று விடுதலைப் போராட்டமானது முக்கிய வளாச்சிக் கட்டத்தை எட்டியுள்ளது. அதேசமயம், ஆதிக்க சக்திகள் நமது தேசத்தின் முன்னேற்றத்தை தடுத்து பல முட்டுக்கட்டைகளை போட்டுள்ளதுடன் எமதுதேசத்தின் நேரடி எதிரியாகிய சிறிலங்காஅரசுடன் பகிரங்கமாக அணிதிரண்டுள்ளன.

தற்போது நமது தேசம் அடைந்துள்ள வெற்றிகளின் முக்கியத்துவத்தை, அவ்வெற்றிகளின் தீர்மானகரமான தார்ப்பரியத்தை எதிரிகளும்

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

# பாடம் படிப்பிக்கும் நம்மக்கள்!

வட தமிழீழப் புனரமைப்பிற்கென இவ்வாண்டு ஒதுக்கப்பட்டிருந்த 556 கோடி ரூபா நிதி, தற்போது அவசர அவசரமாக அங்கு அரசுசார் தமிழ்க் கட்சியொன்றின் தலைமையில் "பகிர்ந்தளிக்க"ப்பட்டுக் கொண்டிருக்கிறது. மக்களின் துன்பங்கள் பற்றியும் அவர்களை தாம் ஒருபோதும் கைவிடப்போவதில்லை எனவும் இக்குழு சபதம் செய்துள்ளது.

இவ்வருடத் தொடக்கத்தில் வினியோகிக்கப்பட்டிருக்க வேண்டிய நிதியானது, வடதமிழீழம் படிப்படியே விடுவிக்கப்பட்டுக்கொண்டு வருவதனால்ஏற்பட்ட அச்சத்தின்காரணமாக அரசினால்முடக்கப்பட்டிருந்தது. அப்போதெல்லாம் நமது மக்கள்பற்றிய அக்கறை இவர்களது நினைவிற்கு வரவில்லை. மேலும் அப்போது இவர்கள்தமது மூட்டை முடிச்சுக்களை கட்டிக்கொண்டு தம்மக்களைக் கைவிட்டு, கொழும்புக்கு கிளம்ப தயாராகிக்கொண்டிருந்த நேரம்.

தற்போது, வரப்போகும்சிறிலங்கா தேர்தலில்ஒரு சில வாக்குகளை பெற்றும், தமக்குத் தாமே போட்டுக்கொண்டும் சில ஆசனங்களை பெற்றுக்கொள்வது, சிங்கள எஜமானர்களுக்கு விசுவாசமாக நடந்து, விடுதலைப் போராட்டத்தை பலவீனப்படுத்துவது போன்ற "மேலான" நோக்கங்களுக்காக இவர்கள் இப்படி திடீர் அக்கறை கொண்டுள்ளனர் என்பதை நமது மக்கள் அறியாமல்இல்லை. ஆனால், இந்த குழுக்களின் அறியாமை என்னவென்றால், சீமெந்து தொழிற்சாலையையும், காகிததொழிற்சாலையையும் பெற்றுத்தந்த "மாபெரும்" தலைவர்களை எமது மக்கள் நிராகரித்த வரலாற்றையும், அவர்களால்நமது தேசத்தின் அடிப்படை அரசியல் அபிலாசைகளை சற்றும் திசை திருப்ப முடியாமல்போனதையும் மறந்துவிட்டதும்தான்.

தமது தேசிய நலன்களுக்கு விரோதமாக பல்வேறு தரப்பினர் பல்வேறு முறைகளில்செயற்பட்டு வருவதை மக்கள்நன்கு அறிவர். அது மட்டுமல்ல இந்த ஒவ்வொரு பிரிவினரையும் எப்படிக் கையாள்வது, எப்படி பயன்படுத்திக் கொள்வது, உரிய நேரத்தில் எந்த வழியில் தண்டிப்பது போன்ற அனுபவங்களையும் வரலாற்றுபூர்வமாக மக்கள் நன்றாக கற்றுத்தேர்ந்து கொண்டுள்ளனர். இந்தவிதத்தில், இறுதியாக உண்மையில்ஏமாறப்போவது மக்களல்ல, மக்களை பகடைக்காய்களாக கருதி நடாத்தியவர்களே என்பதை இன்னுமொரு தடவை வரலாறு விரைவில் நிரூபிக்கும்.

# ஆக்கிரமிப்பு யுத்தமும்! தேர்தல் திணிப்பும்!

தமிழீழ மக்கள் மீது முழுமையான யுத்தத்தை பிரயோகித்துக்கொண்டிருக்கும் நிலையில் சிங்கள அரசு தேர்தலுக்கான முழுத் தயாரிப்பையும் நிறைவேற்றிவிட்டது.

- அத்தியாவசிய உணவுப்பொருள் தடை
- மருந்துத் தடை,
- போக்குவரத்துதடை, நடமாடத் தடை
- சுதந்திர ஊடகங்கள் மீதான தடை
- அத்தியாவசிய நுகர்பொருள் தடை
- விவசாய விதை, உரம் மற்றும் விவசாய சாதனங்களுக்கான தடை,
- மட்டுபடுத்தப்பட்ட தபால் தொலைதொடர்புகள்,
- பாடசாலைகள் மற்றும் மக்களின் பொதுஸ்தானங்களில் படை முகாம்கள்
- பயங்கரவாதத் தடைச்சட்டமும் அவசரகால சட்டமும் அமுல்
- சிவில் நிர்வாகம் முழுவதும் படையினரின் கைகளில்
- நீதிமன்றங்கள் இயங்குவதில்லை.

இவ்வாறு இந்த திட்டமிட்ட இனவொழிப்பு நடவடிக்கைகள் அனைத்தும் யுத்தத்தைக் காரணங்காட்டி எம்மீது இன்றுவரையிலும் திணிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் அரசோ, வடகிழக்கில் மக்கள் சுதந்திரமான வாழ்க்கை நடாத்துகிறார்கள், தேர்தலில் பங்குபற்ற ஆர்வமாயுள்ளார்கள், வேட்பாளர்கள் தம்மை சுதந்திரமாக தேர்தலில் நிறுத்திக் கொண்டுள்ளார்கள்... என பல்வேறு உண்மைக்குப் புறம்பான கதைகளையும் இத்தேர்தலை நடத்தி முடிப்பதன் மூலம் உலகினை நம்ப வைக்க முயன்றுவருகிறது.

மறுபுறம், தன்னை அண்டிவாழும் துரோகக் கும்பல்களை தமிழீழ பிரதேசங்களில் வேட்பாளர்களாக நிறுத்துவதன் மூலமாக, இந்த அரச கைக்கூலிகளை கள்ள வோட்டுக்கள் மூலம் வெல்லப் பண்ணி தன்னை மீண்டும் பலப்படுத்திக் கொண்டு நம்மீதான இனசுத்திகரிப்பை கட்டவிழ்த்து விடப்போகின்றது.

நம்மீதான அடக்குமுறைக்கான அங்கீகாரத்தை நம்மிடமிருந்தே பறித்தெடுக்கும் தந்திரோபாயமே இத்தேர்தல்.

இத்தகைய கொலைகாரத் தேர்தல் நமக்குத் தேவையா? நமது தேசத்திற்கு ஏற்பட்ட, ஏற்பட்டுவரும் இழப்புகளையெல்லாம் இந்தத் தேர்தலால் ஈடுகட்ட முடியுமா?

**எமது இலட்சியம் சுதந்திர தமிழீழம்**

www.tamilarangam.net

# பிராந்திய ஆதிக்க சக்திகளின் நலன்களுக்குள் எமது போராட்டம்!

தமிழீழ விடுதலைப்போராட்டமானது, இன்று அடைந்திருந்தும் தீர்க்கமான வளர்ச்சியின் காரணமாக, பல்வேறு ஆதிக்க சக்திகளின் நலன்களுக்கான போட்டிகளில் அகப்பட்டு விடும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

"புதிய உலக ஒழுங்கு" எனும் தனது ஆதிக்க கட்டமைப்பினுள் உலகம் முழுவதையும் தனது ஆதிக்கத்தினுள் கொண்டுவர அமெரிக்க அரசு முனைப்பாக செயற்பட்டு வருகின்றது. இதில் பிரதானமாக தென்னாசியாவினை , அதன் பரந்த மூலவளங்கள், மனித வளங்களை முற்றிலுமாக தன்வசப்படுத்தும் இலக்குடன் அதன் அண்மைக்கால செயற்பாடுகள் அமைந்துள்ளன.

இதில் தன்னை மேல் நிறுத்திக்கொள்ள, இந்திய அரசுடனும் அதன் நெருக்கமான சகாவான ரஸ்ய அரசுடனும், அவ்வாறே பாகிஸ்தான் அரசுடனும் அதன் நெருங்கிய சகாவான சீன அரசுடனும் அவற்றின் பிராந்திய ஆதிக்க நலன்களை ஏற்றுக்கொண்டு, பேரம் பேசலை செய்தாக வேண்டிய கட்டாயம் உள்ளது. இந்த ஒவ்வொரு அரசுக்கும் இலங்கைத்தீவு மற்றும் அதனை சுற்றியுள்ள பிராந்தியம் என்பவற்றில் அரசியல் அல்லது பொருளாதார நோக்கில் தீவிர ஆதிக்க நோக்கம் தொடர்ந்து இருந்து வருகின்றது. ஆனையிறவு வெற்றிக்கு பின்பு யாழ்முற்றுகை ஆரம்பிக்கப்பட்ட போது, இந்த அரசுகள் விதிவிலக்கின்றி எமக்கு எதிராகவும், சிறிலங்கா அரசை ஆதரித்து நிலைப்பாடுகளை முன்வைத்து இன்றுவரை உறுதியாக நிற்பதை இங்கு நினைவு கூரலாம்.

இதுவரை கால விடுதலைப் போராட்டங்களிலும் புரட்சிகளிலும் சர்வதேச மற்றும் பிராந்திய ஆதிக்க சக்திகளின் தலையீடு இல்லாத போராட்டங்கள் இல்லை என்பதை நாம் அறிவோம். அண்மைக்காலங்களிலும் கூட பாலஸ்தீனம், ஐரிஸ், பொஸ்னியா, கொசோவா, கிழக்குத் திமோர், காஸ்மீர் எதுவாக இருந்தாலும் இதுவே நிலையாகும்.

இந்த பின்புலத்தில், நமது போராட்டமானது, குறிப்பாக தென்னாசியப் பிராந்தியத்தில் இந்திய அரசிற்கும் பாகிஸ்தான் இராணுவ அரசிற்கும் இடையிலான ஆதிக்க முரண்பாட்டிற்குள் இழுத்து விடப்படும் சூழ்நிலை அதிகமாகவே காணப்படுகின்றது.

நமது விடுதலைப் போராட்டத்தில் பாகிஸ்தான் அரசைப்பொறுத்தவரையில் அன்று முதல் இன்று வரை பரபரப்பாக இல்லாவிட்டாலும், சிறிலங்கா அரசைப் பலவிதத்திலும் ஆதரித்தும் பலப்படுத்தியும் வந்துள்ளது. இந்திய மத்திய அரசும் இதே நோக்கத்துடன், ஆனால் மிகவும் திட்டமிட்டு கொள்கை வகுத்தல்களைச் செய்து சிறிலங்கா அரசைத் தன்பிடிக்குள் கொண்டு வரும் முன்னிபந்தனையுடன் காலத்திற்கு காலம் ஏற்ற இறக்கங்கள் கொண்ட வழிமுறைகளை தொடர்ச்சியாக பிரயோகித்து வருவது நாம் அவைரும் அறிந்ததே!

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர், சிங்கள படைகள் தன் போர்த்திறனிழந்து வடதமிழீழத்தை விட்டு தப்பியோடத்தயார் படுத்திக் கொண்டிருந்தபோது, இந்திய, பாகிஸ்தானிய அரசுகள் தத்தமது பிராந்திய ஆதிக்க இலக்குகளில் இருந்து, போட்டிபோட்டுக்கொண்டு சிறிலங்கா அரசைப் பலப்படுத்தின. தொடர்ந்தும் இதனை செய்து வருகின்றன. இந்த பிராந்திய ஆதிக்க சக்திகளுக்கிடையிலான முரண்பாடுகளை சிறிலங்கா அரசும் தன்பங்கிற்கு நன்கு பயன்படுத்தி வருகின்றது.

அண்மைக்காலத்தில் நமது விடயத்தில், என்னதான் கொள்கை மாற்றங்களை இந்திய அரசு செய்து கொண்டதாக அறிவித்தாலும், தனது நலனில் இருந்து நமது விடுதலைப் போராட்டத்தை பலவீனப்படுத்தும் அடிப்படை இலக்கில் இருந்து அது அவ்வளவு இலகுவில் மாறிவிடப்போவதில்லை என்பதை நிரூபித்து வருகின்றது..

அதேபோன்று, தன் நலன்களை அடைவதற்காகவும் தற்போதைய குறிப்பான சர்வதேச தனிமைப்படுத்தலிலிருந்து விடுபட்டு பிராந்தியத்தில் தன்னுடைய முத்திரையைப் பதிப்பதற்கும், இராணுவ அரசு என்ற அர்த்தத்தில் இருந்து மாறியுள்ளதாக காட்ட தானும் ஒரு அரசியல் தீவிர பாத்திரம் ஆற்றும் நோக்குடன் பாகிஸ்தான் அரசு, தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக சிறிலங்கா அரசை பலப்படுத்துவதிலும் ஈடுபடுகின்றது. கூடவே, தெற்கு நோக்கி, இந்திய அரசின் கவனத்தை திருப்புவதிலும் பாகிஸ்தான் அரசு தொடர்ந்து ஈடுபடுவதற்கு வாய்ப்புக்கள் அதிகம் உள்ளது.

எனவே நமது விடுதலைப்போராட்டத்திற்கு எதிராகவே இரண்டு பிராந்திய ஆதிக்க அரசுகளும் வெளிப்படையாகவே செயற்படுகின்றன. அதேசமயம் அவை இரண்டும் தமக்குள் முரண்பட்டு மோதிக்கொண்டிருக்கும் அணுவாயுத அரசுகளாகவும் இருக்கின்றன. இந்த முரண்பாடுகள் ஏகாதிபத்திய சக்திகளை கலங்கவைக்கும் விடயமாகவும் உள்ளன. இந்த பின்புலத்தில் நமது விடுதலைப் போராட்டத்திற்குள் ஏகாதிபத்திய சக்திகளும் தலையீட்டை செய்துவருவதன் தார்ப்பரியத்தை நாம் புரிந்து கொள்ள முடியும்.

மேற்படி விடயங்களை கணிப்பில் கொண்டு, தமிழீழ விடுதலைப் போராட்டமானது, கடந்து செல்ல வேண்டிய நீண்ட நெடும்பயணம் பற்றிய ஒரு சித்திரத்தை நாம் பெற்றுக் கொள்வோம். இந்த சிக்கலான நெடும்பயணத்தில் நாம் ஈழத்தமிழரின் அரசியல் உரிமைகளையும், தேசிய இறைமையையும் விட்டுக்கொடாமல், நமது தேசத்தின் சக்தியனைத்தையும் ஒன்று திரட்டியும் பலப்படுத்தியும் செயற்பட வேண்டியவர்களாக உள்ளோம். இதற்காக தேசத்தின் உள்ளும் வெளியேயும் நாம் பல கடமைகளை ஆற்றவேண்டியவர்களாக உள்ளோம். இது முழுத்தேசத்தினதும் உடனடிக் கடமையாகும்.

இந்த இலக்கில் அவசியமான, நம்பகமான அணிச்சேர்க்கைகளை உள்ளும் வெளியிலும், இரகசியமாயும் பகிரங்கமாயும் நாம் மேற்கொள்வோம். நமது மக்களின் வற்றாத பலத்தினை அடித்தளமாகக் கொண்டதாக இவற்றை அமைத்துக்கொள்வோம்.

புறச்சூழல் சாதகமாகும் போது நாம் விரைந்து முன்னேறுவோம். பாதகமாகும் போது, எந்தவித தயக்கமும் இன்றி பின்வாங்கி அகத்தயாரிப்புகளை செய்து வருவோம். பிரதானமாக, இன்று, நமது புற முரண்பாடுகளை எதிர்கொண்டு தீர்ப்பதுடன் ஒப்பிடுகையில் அக முரண்பாடுகளை தீர்ப்பதற்கு நமக்கு குறைந்தளவு சக்தி போதுமானதாக உள்ளது. அவ்வாறு தீர்க்கப்படும் போது, பொது எதிரிகளை எதிர்கொள்ளும் நமது வலுவும் பன்மடங்கு அதிகரிக்கின்றது. எதிரிகளின் மீதான தாக்குதல்களும் தீர்மானகரமானதாக அமையும். இது உலகவரலாற்றில் நிரூபிக்கப்பட்ட போராட்ட விதிகளாகும்.

நண்பர்கள் பலரை இணைத்து எதிரிகள் சிலரை தோற்கடித்தல் என்ற விடயத்தில் நம்மைச்சுற்றி ஏராளம் நட்புசக்திகள் உள்ளன. அவற்றை மெய்யான கரிசனையுடன் அணிசேர்க்க நாம் தேசமாக ஒன்றிணைந்து முயல்வோம். இதன் மூலம் போராட்டத்தின் கடினம் இலகு படுத்தப்படும், தொலைவு குறுக்கப்படும்.

- தருமு

## ஓரணி திரண்டு... (முதலாம் ஆம் பக்க தொடர்ச்சி...)

அவர்களின் ஆதிக்க கூட்டுகளும் தெளிவாகவும் துல்லியமாகவும் புரிந்துகொண்டுள்ளார்கள். எதிரிகள் புரிந்துகொண்டுள்ளதை விட இவ்வெற்றிகளின் முக்கியத்துவத்தை சிறப்பாக நாம் புரிந்து கொண்டு, எமது போராட்டத்தின் இவ்வளவு கால விலைகளையும் அர்ப்பணிப்புக்களையும் அர்த்தமுள்ளதாக்கும் வகையில் எமது எதிர்காலச் செயற்பாடுகள் அமைவதை உறுதிப்படுத்துவது ஈழத்தமிழர் ஒவ்வொருவரதும் கடமையல்லவா?

நம் தேசிய இருப்பை மறுத்தும் அழிதொழித்துக்கொண்டும், போர்கால நிலைமையை பிரகடனப்படுத்திக்கொண்டும், நமது அரசியல், சட்ட மற்றும் மனிதவுரிமைகள் அனைத்தையும் தன் போர்வெறிச் சப்பாத்துகளால் மிதித்துக் கொண்டும் சிங்கள பாராளுமன்றம் அமைக்கும் தேர்தலை சிறிலங்கா அரசு நடாத்தப்போகின்றது. தேர்தல் என்பது மக்கள் தமது அரசியல் அபிலாசைகளை வெளிப்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பாகும். இதனை எவ்வாறு பயன்படுத்திக்கொள்வது என்பது அந்த கட்டத்தில் உள்ள நிலைமைகளையும், ஒரு சமூகம் இதன் காரணமாக உயர்ந்தபட்சம் எவற்றைப் பெறப்போகின்றது என்பதைப் பொறுத்ததுமாகும். இப்படிப்பட்ட தேர்தலில் பங்குகொள்வதால் மட்டுமல்லாது, பங்குகொள்ளாது நிராகரிப்பதாலும் பகிஸ்கரிப்பதாலும் கூட ஒரு சமூகம் தன் உயர்ந்த பட்ச இலக்குகளை தெளிவாக்க முடியும். அதற்கான பலப்படுத்தல்களை செய்ய முடியும்.

இந்த வகையில்தான் 1977 இல் நமது தேசம் ஒரு தேர்தலில் பங்குபற்றி தமிழீழ குடியரசை அமைத்திடும் தன் விருப்பத்தை வென்று கொண்டது. இதன் அரசியல் முக்கியத்துவத்தை உணர்ந்தே 1983 இல் சிறிலங்கா அரசு இனஅழிப்பை நடாத்தியது. எமது சனச்செறிவை குறைக்க உலகெங்கும் விரட்டியடித்தது. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை எமது தாயகத்திற்குள் செருகியது. 6வது அரசியல்யாப்பு சட்டத்தை நிறைவேற்றி எமது அடிப்படை இலட்சியத்தை தடைசெய்தது. எம்மீது "போர் என்றால் போர்" என்ற சங்காரத்துடன் போரைத் தொடுத்தது. பொருளாதாரத் தடை என்றும் மீன்பிடிக்கத் தடை என்றும் விவசாயப் பொருட்கள் தடை என்றும் மக்கள் சுதந்திரமாக நடமாடத் தடை என்றும் பல தடைகளை விதித்தது. திறந்தவெளி சிறைச்சாலைகளில் மக்களை அடைத்தும் மாணவர்களைக் கொன்றும் பெண்களை பாலியல் துன்புறுத்தல்கள் செய்தும் எம்மை சிதைக்க, ஒடுக்க நினைத்தது. இவை அனைத்தையும் நம்தேசம் தகர்த்தெறிந்து இன்று வெற்றிப் படிகளை தொட்டு நிற்கின்றது.

இந்நிலையில் இன்னுமொரு தேர்தல் வலை நம்முன் விரிக்கப்பட்டுள்ளது. நம்மை அதற்குள் சிக்க வைப்பதற்கு வீசப்பட்டுள்ளது. எம்மீதான

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அடுத்து வரும் திருப்பங்களும் நம் தேசியகடமைகளும்

செப்டெம்பர் முதல் வாரத்தில், சிறிலங்கா படைகள் யாழில் தொடங்கிய தாக்குதல் முயற்சி விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளது. பெறுகின்ற வெற்றிகளை தமது தேர்தல் பிரச்சாரங்களுக்கு பயன்படுத்துதல், விடுதலைப் புலிகளின் அடுத்த தாக்குதலுக்கான பாரிய தயாரிப்புகளை சிதைத்தல், சிங்கள படைகளின் மனத்திடத்தை உயர்த்துதல், புதிய போர்ச் சாதனங்களை நம்மீது பரீட்சித்துப்பார்த்தல் போன்ற நப்பாசைகளினால் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதல் முயற்சி சிறிலங்கா அரசுக்கு கணிசமான இழப்புக்களுடன் தோல்வியில் முடிந்துள்ளது.

நமது தேசியவிடுதலைப் போராட்டமானது, இன்றைய நிலையில் இருந்து இன்னுமொரு வளர்ச்சிக்கட்டத்திற்கு செல்வதென்பது அதன் தவிர்க்க முடியா வரலாற்று விதியாகும். இவ்வாறான முன்னேற்றங்களை தடுத்து நிறுத்துவதில் சர்வதேச மற்றும் பிராந்திய ஆதிக்க சக்திகள் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றன. சிறிலங்கா அரசின் இறைமைக்குள் தீர்வு என்று இந்த ஆதிக்க சக்திகள் நமக்கு முன்னிபந்தனை போட்டுவிட்டு எமக்கு எதிராக திடமாகவே செயற்பட்டு வருகின்றன.

நமது போராட்டத்தின் அடுத்தடுத்த முன்னேற்றங்கள் என்பது தடுத்து நிறுத்தப்பட முடியாதது மட்டுமல்ல அதற்கான அவசியம் மென்மேலும் அதிகரித்துள்ளது. நமது போராட்டத்தின் அடுத்தகட்ட முன்னேற்றம் என்பது இந்த ஆதிக்க கூட்டின் நலன்களுக்கு பேரிடி போன்றது. சிறிலங்கா இறைமைக்குள் தீர்வு எனும் அவர்களின் ஆதிக்க நலன்களுக்கு நமது தேசத்தின் வெற்றிகள் பெரும் சவாலாகும். பாரிய வல்லரசுகளாக தம்மை தாபித்துக் கொண்டுள்ள ஆதிக்க அரசுகளுக்கு பொதுவில் தேசிய விடுதலைப் போராட்டங்களும், குறிப்பாக நமது விடுதலைப் போராட்டமும் எதிரானதாகும். எனவேதான் இந்த புத்தாயிரமாம் ஆண்டில் அவர்களின் புதிய உலக ஒழுங்கில் ஒரு புத்தம் புது இளம் தமிழீழக் குடியரசான, ஒரு தேசம் தனது சொந்தக் காலில் நின்று கொண்டு, உருவாக்குவதை தடுப்பதற்கு தம்மால் இயன்றதனைத்தையும் இந்த ஆதிக்க சக்திகள் செய்து வருகின்றன. நமது குடியரசிற்கு சர்வதேச அங்கீகாரம் கிடையாது எனவும் அச்சுறுத்தியுள்ளன.



எல்லாவித தடைகளையும் எதிர்த்து நமது விடுதலைப் போராட்டம் தொடர்வதும், அடுத்தடுத்த முன்னேற்றங்கள் அடையப் பெறுவதும் உறுதி. ஆகவே ஏகாதிபத்திய சக்திகளும், பிராந்திய ஆதிக்க சக்திகளும் இம்முன்னேற்றத்தை தடுத்து நிறுத்த நேரடியாக நுழையப்போவதும் எதிர்பார்க்கப்பட வேண்டியதே! இவ்வாதிக்க சக்திகளை எதிர்கொள்வதற்கு, அதுவும் எமது தேசத்தின் நிகழ்ச்சி நிரலிலிருந்து எதிர்கொள்வதற்கு ஏற்ப எமது தேசவிடுதலைப் போராட்டம் தேவையான நகர்வுகளையும் தயாரிப்புக்களையும் கொள்ள வேண்டும்.

இவ்வாறு போதிய தயாரிப்புக்களுடன் அடுத்த கட்ட பாய்ச்சலை நமது தேசம் அடைய வேண்டும் என்பது வரலாற்றினால் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுவிட்ட விடயமாகும். எம்மீதான அவர்களது "ஆக்கிரமிப்பு இறைமை" என்ற துருப்புச்சீட்டு ஒரு நாள் கிழிக்கப்பட்டு நமது "சுதந்திர இறைமை" நிலைநாட்டப்படும். ஆக்கிரமிப்பு படை துரத்தியடிக்கப்பட்டு சுதந்திரக்கொடி நடப்படும். வரலாற்றில் பல தேசங்கள் புதிதாக தமது வரலாறுகளைப் பதித்து சாதனைகள் புரிந்துள்ளன. இவ்வாறான சாதனை படைப்பது நமது தேசத்தின் கரங்களில் உள்ளது. தேசியவிடுதலைக்காகப் போராடும் சக்திகளின் கரங்களில், பரந்து பட்ட மக்களின் கரங்களில் உள்ளது.

நமக்கு இருக்கும் குறுகிய அவகாசத்தில் ஈழத்தமிழர் அனைவரும் நமது பொது இலக்கில் ஓரணி திரள வேண்டும். தேசிய விடுதலையில் உறுதியாக நிற்கும் அனைத்து போராட்ட சக்திகளும், தேசிய சக்திகளும் ஒரணியில் நிற்க வேண்டும். நாம் ஒவ்வொருவரும் எமது தேசியக் கடமைகளை ஆற்ற வேண்டும்.

- இங்கு இதற்கான சூழலை உருவாக்குவது பிரதான முன்னிபந்தனையாகும். தேசிய விடுதலைப் போராட்டத்தின் அனைத்துச் சக்திகளின் இன்றைய பிரதான கடமையாகும். இக்கடமை நிறைவேற்றப்படுவது பெரிதும் விடுதலைப்புலிகளின் தரப்பில் உள்ளது. பலம்வாய்ந்த எதிரிகளின் ஆதிக்க கூட்டானது காகிதக் கூட்டாக்கப்படுவதற்கு நமது தேசத்தின் அனைத்து தேசபக்த சக்திகளதும் திரட்டப்பட்டு விடுதலைக்கான அனைத்துக் தளங்களிலும் இறக்கப்படுவது மிக பிரதானமாகும். அவ்வகையில் செயற்படுவதற்கான சூழல்கள் திறந்து விடப்படுவதுடன் உற்சாகப்படுத்தி வளர்த்து விடப்பட வேண்டும். இது மிகவும் இன்றியமையாதது.
- பரந்துபட்ட நமது மக்கள் தமது தேசிய அபிலாசைகளை வெளிப்படுத்தவும் விடுதலைப் போராட்டத்தைப் பாதுகாக்கவும் தம்மை அமைப்பாக்குவதற்கான சூழல் உருவாக்கப்பட வேண்டும். அதேசமயம் தேசிய அடக்குமுறைகளால் சிதைக்கப்பட்டு வரும் பல்வேறு வர்க்கங்களும் சமூக சக்திகளும் தமது சொந்தக் கோரிக்கைகளுடன் பிரதான தேசியக்கோரிக்கைகளின் பின்புலத்தில் அமைப்பாக வேண்டும் அமைப்பாக்கப்பட வேண்டும். ஏற்கனவே அமைப்பாக உள்ளவை தம்மை புடம்போட்டு புத்துயிர்ப்படைய வேண்டும்.
- தொடர்பூடகவியலாளர்கள் நமது விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிகளையும் அது எதிர்கொள்ளும் ஆபத்துக்களையும் சரியாக கணிப்பிட்டு இந்த உண்மைகளை, தணிக்கை ஆக்கிரமிப்பினை ஊடறுத்தது நமது மக்களுக்கு கொண்டு செல்வதிலும் மக்களை அமைப்பாகுமாறு கோருவதிலும் குறிப்பான கவனத்தை செலுத்த வேண்டும். எம்மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள கொடுமைகளை உலகின் கவனத்திற்கு ஒவ்வொரு நாளும் கொண்டு வரவேண்டும்.
- போர்க்கால இலக்கியங்கள் பல படைக்கப்பட வேண்டும். கிராமம் கிரமமாக கையெழுத்துப் பிரதிகள் அளவிற்கு அவை விரிவடைய வேண்டும். பலவந்த சட்ட முறைகளையும் கெடுபிடிகளையும் ஊடறுத்துக்கொண்டு பரந்துபட்ட நமது மக்களை எழுச்சியூட்டவும், அவர்களை போராட்டக்களத்தில் பல்வேறு வடிவங்களுடன் வந்து குவிக்கவும் உந்தித்தள்ள வேண்டும். இதற்கு நமது எழுத்துக்களும் கவிதைகளும் பங்களிக்க வேண்டும்.
- தேசிய சக்திகள் மற்றும் விடுதலையில் ஊன்றி நிற்கும் அமைப்புகள் குழுக்கள் தமக்கிடையில் நிலவும் கோட்பாட்டு வேறுபாடுகளில் மயிர்பிளக்கும் வாதங்களை நடாத்திக் கொண்டிருக்காது, உடனடியான பொது வேலைத்திட்டங்களை முன்வைத்து தமது அரசியல் கடமைகளை முனைப்பாக்க வேண்டும்.
- ஆதிக்க சக்திகளால் மிதிக்கப்பட்டு வரும் சக தேசங்களுடன் உறவுகளை நாம் பலப்படுத்த வேண்டும். இதற்கான சூழலை முதலில் உருவாக்குவோம். இவ்விடயத்தில் விடுதலைப்புலிகளின் கடமைகளை மறுபடியும் மறுபடியும் வலியுறுத்துவதுடன், தமது பக்க கடமைகளை தேசிய சக்திகளும், நமது தேசத்திலுள்ள பல்வேறு நிறுவனங்களும் அமைப்புகளும் மேற்கொள்வோம். நிலவும் தப்பெண்ணங்கள் சந்தேகங்களை களைய தேசமாக இணைந்து இக்கடமையை மேற்கொள்வோம்.
- தமிழக மக்கள் நமக்கு ஆதரவாக இன்னும் பலமாக நிற்பதற்கான திட்டமிட்ட தயாரிப்புகளை மேற்கொள்வோம். இதன் முக்கியத்துவம் தற்போதைய சூழலில் அளப்பெரிய முக்கியத்துவம் கொண்டதென்பதை உணர்ந்து இதில் கவனம் குவிப்போம்.
- சர்வதேச முற்போக்கு ஜனநாயக புரட்சிகர சக்திகளை நமது போராட்டத்திற்கு ஆதரவாக நிற்க செய்ய குறிப்பான செயற்பாடுகளை மேற்கொள்வோம். தோற்றோடத் தயாராகும் சிங்கள படைகள் நமது மக்கள் மீது மேற்கொள்ளும் கொலைவெறி நடவடிக்கைகளை உலக மனசாட்சியின் முன் கொணர்வோம். நமது தேசத்தின் விடுதலையை, அதன் வெற்றியை அங்கீகரிக்குமாறு கோருவோம். நமது பலமான ஒருமித்த குரலால் இதனை நிச்சயம் சாதிக்க முடியும்.
- போரின் உக்கிரம் காரணமாக தமது இருப்புகள் சிதைக்கப்பட்டு அல்லலுறும் நம் மக்களை, இடம்பெயரும் மக்களை ஒழுங்கமைப்பதிலும், உணவும் மருந்துகளும் மறுக்கப்பட்டுள்ள

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**தமிழீழ மக்கள் குடியரசின் அடிப்படை பிரிவினர்கள்: 1**

# ஆசிரியர்கள்



அண்மைக்காலமாக, தமிழ், (முஸ்லிம்) ஆசிரியர்களின் போராட்டங்கள் அதிகரித்தும் தீவிரமடைந்தும் உள்ளன. இடர்கால கொடுப்பனவு, பதவியுயர்வு, நிரந்தர நியமனம்.. போன்ற விடயங்கள் தொடர்பாக, நிரந்தர ஆசிரியர்கள், பயிலுனர் ஆசிரியர்கள், மற்றும் தொண்டர் ஆசிரியர்கள் ஆகியோர் தொடர்ச்சியான போராட்டங்களை நடாத்தி வருகின்றார்கள். தமது உரிமைகளுக்காக ஆசிரியர்கள் முன்னெடுத்து வருகின்ற இத்தகைய போராட்டங்கள் சமூக மற்றும் அரசியல் ரீதியல் அக்கறைக்குட்படுத்தப்பட வேண்டியவை.

ஒரு சமூகத்தின் கௌரவத்திற்குரிய பிரிவினராக ஆசிரியர்கள் விளங்குகின்றார்கள். தமது சமூகத்தின் எதிர்கால அறிவாற்றல் மிக்க சந்ததிகளை உருவாக்குவதிலும் அச்சந்ததிகளின் அறிவு செயற்பாட்டை ஒழுங்கமைப்பதிலும் ஆசிரியர்களின் பாத்திரம் முக்கியத்துவமிக்கது. தமது சமூகம் கடினமான காலகட்டத்தை கடந்து கொண்டிருக்கின்ற நிலையிலும் தாம் எதிர்கொள்கின்ற அபாயங்கள், சுமைகள், அழுத்தங்கள் என்பவற்றை தாங்கி, தமது கடமையை நிறைவேற்றுகின்ற பாரிய சமூக பொறுப்பை ஆசிரியர்கள் கொண்டிருக்கின்றார்கள். எத்தகைய சூழலிலும் தமது சமூகத்துடன் நேரடியாக கலந்து, பிணைந்தவர்களாகவும் அதன் இயக்கத்துடன் இணைந்து செல்பவர்களாகவும் ஆசிரியர்கள் திகழ்கின்றார்கள்.

எனினும் நாளாந்த வாழ்வில் அதிக சிக்கல்களையும் சிரமங்களையும் எதிர்கொள்கின்ற அரச ஊழியர்களாக ஆசிரியர்களே இருக்கின்றார்கள். நடைமுறையிலுள்ள நிர்வாக முறையில், ஆசிரியர்கள் மட்டுமே, தமக்கென நிர்வாக முறைமையை, நிர்வாக நிறுவனத்தை கொண்டிராத அரச ஊழியர்களாக இருக்கின்றார்கள். ஏனைய சகல அரச ஊழியர்களும் தாம் கடமை புரிகின்ற நிறுவனத்திற் கூடாகவே, தமது தொழில்சார் தேவைகளை பூர்த்தி செய்ய கூடிய வாய்ப்பை பெற்றிருக்கின்ற நிலையில், ஆசிரியர்கள் மட்டுமே, தமது தொழில்சார் தேவைகள் அனைத்துக்கும் தம்முடன் எந்த தொடர்பும் அற்ற, தமது நேரடி பங்குபற்றல் இல்லாத கல்வி அலுவலகத்தில் தங்கியிருக்க வேண்டிய அவலநிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றார்கள். சட்டரீதியில் தமக்கு வழங்கப்பட வேண்டியவற்றுக்காக, மாதக்கணக்கில் காத்திருக்க வேண்டிய துயர நிலையை ஆசிரியர்கள் அனுபவித்து வருகின்றார்கள்.

ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்ற சம்பளம் ஒப்பீட்டளவில் மிகக்குறைவானது. ஆமாம்! சிறிலங்கா அரசுத்தலைவரும் ஏனைய கல்வி அதிகாரிகளும் வன்மத்துடன் பிரச்சாரப்படுத்தி வருவது போன்று, ஆசிரியர்களுக்கு அதிக சம்பளம் வழங்கப்படவில்லை. ஒரு சிறிய எண்ணிக்கையானோர் தவிர, மிக பெரும்பாலான ஆசிரியர்களின் சம்பளமானது, அவர்களின வாழ்க்கை செலவுடன் ஒப்பிடுகையில் மிகுந்த பற்றாக்குறையை கொண்டதாக அமைந்துள்ளது. குறைந்த சம்பளத்தில் இணைத்து கொள்ளப்பட்டுள்ள பயிலுனர் ஆசிரியர்கள், ஒப்பந்த அடிப்படையில் சேவை புரிகின்ற ஆசிரியர்கள், கொடுப்பனவுகள் எதுவுமற்ற தொண்டர் ஆசிரியர்கள் போன்றோரின் நிலை இன்னமும் மோசமான நிலையை அடைந்திருக்கின்றது.

அடிக்கடி மாற்றப்படுகின்ற, நமது சூழலுக்கு எவ்விதத்திலும் பொருத்தமற்ற கல்வி திட்டங்களின் மூலமாக, முதலில் பாதிக்கப்படுகின்றவர்கள் ஆசிரியர்கள்தான். ஏற்கனவே தாம் பெற்றுள்ள கல்வி அறிவு, தொழில்சார் தகைமை போன்றவற்றுடன் எவ்விதத்திலும் பொருந்தாத இத்தகைய கல்வித்திட்டங்களை பின்பற்ற முடியாத சிக்கல்களுக்குள் ஆசிரியர்கள் உட்படுகின்றார்கள். புதிதாக அறிமுகப்படுத்தப்படுகின்ற கல்வி திட்டங்கள், கற்பித்தல் நடவடிக்கைகளுடன், பதிவுசெய்தல் என்ற புதிய அம்சத்தையும் கொண்டிருப்பதால், ஆசிரியர்கள் இரட்டை சுமைக்கு ஆளாகின்றார்கள். மேற்கு நாடுகளில் செயற்படுத்தப்படுகின்ற கணனியுடன் கூடிய கல்வி திட்டத்தை இங்கு பின்பற்ற நினைப்பவர்கள், கணனிகளை விட்டு விட்டு, அந்த திட்டத்தை மட்டும் இங்கே நடைமுறைப்படுத்துவதற்கு, முட்டாள்தனமான ஆவேஷத்துடன் முயற்சிக்கின்றார்கள். இதனால் இங்குள்ள ஆசிரியர்கள் ஒரேநேரத்தில், கற்பிப்பவர்களாகவும் எழுதுவினைஞர்களாகவும் இரட்டை பணியை செய்ய வேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளார்கள்.

மிகப் பெரும்பாலான தமிழ்மொழிமூல பாடசாலைகளில், ஆசிரியர் பற்றாக்குறை என்பது தீர்க்கப்படாத பிரச்சினையாக தொடர்ந்தும் நீடிக்கின்றது. ஆசிரியர்களின் வேலைகளை பங்கிடக் கூடிய உதவியாளர்களை கொண்டிருக்கின்ற முறைமை இங்கு நடைமுறையில் இல்லை. இவற்றின் விளைவாக, தமது வேலைநேரம் முழுவதும் கற்பித்தலில் ஈடுபட வேண்டிய அவசியத்திலுள்ள ஆசிரியர்கள், பதிவு செய்தல் என்ற தனியான செயலுக்காக, வேலைநேரம் தவிர்ந்த தமது சொந்த நேரத்தை, சொந்த வாழ்க்கையை செலவழிக்க வேண்டிய நிர்பந்தத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளார்கள். இதன் விளைவாக, ஆசிரியர்களின் தனிப்பட்ட வாழ்க்கையானது, குழப்பமும் சிக்கலும் மன உளைச்சலும் நிறைந்ததாக மாறியிருக்கின்றது.

சிங்கள அரசின் இனவாத அணுகுமுறைகள், தமிழ், முஸ்லிம் ஆசிரியர்களின் மேல் கூர்மையான அடக்குமுறையாக அழுந்த படிகின்றன. குறைந்த நிதி ஒதுக்கீடு, உரியநேரத்தில் சம்பளம் வழங்காமை, இடர்கால கொடுப்பனவுகளை நிறுத்துதல், தொண்டர் மற்றும் பயிலுனர் ஆசிரியர்களை நிரந்தரமாக்காமை, ஆசிரிய வெற்றிடங்களை நிரப்பாமை... என தமிழ், முஸ்லிம் ஆசிரியர்களை இலக்காக கொண்டு சிங்கள அரசு மேற்கொள்கின்ற இனவாத நடவடிக்கைகள் இந்த ஆசிரியர்களை கடுமையாக பாதித்து வருகின்றன.

யுத்த சூழலின் கொடும் விளைவுகளும் தமிழ், முஸ்லிம் ஆசிரியர்களை ஆழமாக பாதித்து வருகின்றன. ஏனைய அரச நிறுவனங்கள் பெரும்பாலும் நகரை அண்டியும் இலகுவில் சென்றடைய கூடியதாகவும் இருக்கின்ற நிலையில், பாடசாலைகளோ குக்கிராமங்கள் வரை வியாபித்துள்ளன. இப்பாடசாலைகளை சென்றடைவதற்கான மார்க்கங்கள் கடினமானதாகவும் அபாயத்திற்குரியதாகவும் இருக்கின்றன. இங்கு கற்பிக்கின்ற ஆசிரியர்கள் போக்குவரத்திற்காக கணிசமான நேரத்தை செலவழிக்க வேண்டியிருப்பதோடு, தாக்குதல் சம்பவங்களுக்கிடையில் அகப்பட கூடியவர்களாகவும் உள்ளார்கள். கடுமையானதும், அவமானப்படுத்துகின்றதுமான சோதனை முறைகளையுடைய பலசோதனை சாவடிகளை கடந்தும் தமது உயிர்வாழ்வு குறித்த அச்சத்துடனும் செல்ல வேண்டிய இக்கட்டான நிலையில் தமிழ், முஸ்லிம் ஆசிரியர்களின் நிலை அமைந்துள்ளது.

கொடிய யுத்த சூழலுக்குள்ளும் குறைந்த சம்பளத்தில் பயிலுனர் ஆசிரியர்களாகவும் சம்பளமற்ற தொண்டர் ஆசிரியர்களாகவும் கடமை புரிந்த தமிழ், (முஸ்லிம்) ஆசிரியர்கள் சமூக ரீதியில் போற்றுதலுக்குரியவர்கள், பெருமைக்குரியவர்கள். பலவருடங்களாக, எதுவித கொடுப்பனவுகளுமின்றி, தொண்டர் ஆசிரியர்களாக பணிபுரிந்து வருகின்றவர்களை நிரந்தரமாக்குவதில், சிறிலங்கா அரசு காட்டி வருகின்ற உதாசீனப் போக்கு, அதன் இனவாத சொரூபத்தின் இன்னொரு வடிவமாக அமைந்திருக்கின்றது. யுத்த சூழலுக்குள் கடமை புரிகின்றவர்கள் என்றவகையில், தொண்டர் ஆசிரியர்கள், பயிலுனர் மற்றும் நிரந்தர ஆசிரியர்கள் தொடர்பாக கடைப்பிடிக்க வேண்டிய அணுகுமுறைகள் முற்றிலும் வேறாக இருக்க வேண்டும். தொண்டர் ஆசிரியர்களையும் பயிலுனர் ஆசிரியர்களையும் நிரந்தரமாக்குவதிலும் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் சலுகைகள் மற்றும் வசதிகள் போன்றவற்றை வழங்குவதிலும் விஷேட விதிகள் பின்பற்றப்பட வேண்டும். ஆனால் சிங்கள அரசின் இனவாத கொள்கைகளோ இதற்கு முற்றிலும் மாறாக, இந்த ஆசிரியர்களின் வாழ்வையும் ஆன்மாவையும் சீரழிக்கும் வகையில் அமைந்துள்ளன.

மேலதிகாரிகளின் செயற்பாடுகளும் ஆசிரியர்களை பாதிக்கின்ற இன்னுமொரு காரணியாக அமைந்திருக்கின்றது. கல்வி அதிகாரிகளாகவும் கல்வி ஆலோசகர்களாகவும் விளங்குகின்ற இந்த மேலதிகாரிகள், ஆசிரியர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை அக்கறையுடனும் அனுதாபத்துடனும் அணுகுவதில்லை. ஆசிரியர்களை ஊக்கப்படுத்தி, கற்பித்தல் நடவடிக்கைகளில் அவர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு பதிலாக, அவர்களில் குற்றங்களை கண்டுபிடிப்பதிலேயே பெரும்பாலான மேலதிகாரிகளின் அக்கறைகள் குவிந்துள்ளன. கற்பித்தல் சுமை, சிறிலங்கா அரசின் இன-

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தற்கொலை போராட்டத்தின் அரசியல்

**“**இளைய வயதில் உலகை வெறுத்தா

நிறங்களை உதிர்த்தன, வண்ணத்துப்பூச்சிகள்?”

நம் தேசத்துக் கவிஞனொருவன் என்றோ எழுதிவைத்த அர்த்தம் நிறைந்த வரிகள். இன்றும் உயிர்த்துடிப்புடன் நமது தேசத்தின் வாழ்வில் நித்தம் நித்தம் புத்துயிர்க்கப்பட்டு வருகின்றன. ஆம், இளைய வயதில் நிறங்களை உதிர்க்கும் வண்ணத்துப் பூச்சிகளாய் நமது போராளிகள், எழுதப்படாத கவிதைகளுக்கும் படிமம் தருபவர்களாய், நமது தேசத்தின் வாழ்வை அர்த்தமுள்ளதாக்கி வருகின்றனர்.

வாழ்க்கையை வெறுப்பவர்களால் எப்படி வாழ்க்கைக்காக மரணிக்க முடியும்...? இத்தனை உயர்வான தியாகங்களை எவ்வாறு மேற்கொள்ள முடியும்...? எங்கும் யார்க்கும் தலை வணங்காத சுதந்திரமான வாழ்வின் உன்னதத்தை உணர்வுகளால் ஸ்பரிசிப்பவர்களால்தான் வாழ்வுக்காக மரணிக்க முடிகிறது. மாபெரும் தியாகங்களை செய்ய முடிகிறது. முன்கூட்டியே நிச்சயிக்கப்பட்ட தமது மரண நாளுக்காக தம்மை தயார்படுத்திக் கொண்டு வாழ்ந்திட முடிகிறது. குறித்த நேரத்தில் தமது கொள்கைக்காக, சுதந்திர கனவிற்காக, எதிர்கால யதார்த்தத்திற்காக தம்மையே அழித்துக் கொள்ள முடிகிறது.

நமது விடுதலைப் போராட்டம் வெற்றி நோக்கி காலடி வைக்கும் ஒவ்வொரு இராணுவ - அரசியல் முன்னெடுப்புகளின் போதும் தம்மை பிரக்ஞைபூர்வமாக அர்ப்பணித்துக் கொள்வதனூடாக போராட்டத்தை முன்னோக்கித் தள்ளுவதில் பங்கேற்கும் தற்கொலைப் போராளிகள் இத்தகையவர்களே.

மனத்திடம், தான் மேற்கொள்ளப் போகும் காரியத்தின் பாலான தெளிவான சிந்தனை, அர்ப்பணிப்புணர்வு, துணிகரம், கொள்கைப்பற்று, அனைத்திற்கும் மேலாக தனது மக்கள்பால் கொண்டுள்ள எல்லையற்ற பரிவு ஆகிய உணர்வுகளையுடைய ஒருவரால்தான் தற்கொலைப் போராளிக்குரிய பாத்திரத்தை ஆற்ற முடிகிறது. அவ்வகையில் நமது விடுதலைப் போராட்டத்தின் உயர்ந்த போர்க்குணாம்சத்தின் குறியீடாக தற்கொலைப் போராளிகள் திகழ்கின்றனர். இளய வயதில் தமது உலக ஆர்வங்களை எல்லாம் ஒதுக்கிவிட்டு தேசத்தின் நலனையே குறியாகக் கொண்டு தமது பெறுமதிமிக்க உயிரை அர்ப்பணித்திடும் தற்கொலைப் போராளிகள் நமது தேசத்தின் உயர்ந்த கௌரவத்திற்கு உரியவர்களாவார்கள். ஈழத்தமிழ் தேசம் உள்ளளவும் தற்கொலைப் போராளிகளின் நினைவுகளும் வாழ்ந்திடும்.

அடக்குமுறை எந்தளவுக்கு உச்சத்தில் உள்ளதோ அங்கெல்லாம் அடக்குமுறைக் கெதிரான விடுதலைப் போராட்ட வேள்வியில் தற்கொலைப் போராளிகள் உயிர்க்கின்றனர். நமது போராட்ட சூழலுக்கு அப்பால், இவ்வுணர்வை உலகுக்கு உணர்த்திடும் நிதர்சனமாக பாலஸ்தீன, செச்னிய விடுதலைப் போராட்டங்கள் திகழ்கின்றன. ஆசியாவின் இதயமான பாலஸ்தீன விடுதலைப் போராட்டமே தற்கொலைப் போராட்டத்தில் நமக்கு முன்னோடி.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புக்கு எதிராக வியட்நாமிய மக்களால் மேற்கொள்ளப்பட்ட மாபெரும் தேசவிடுதலைப் போராட்டத்தில் எதிரியை தோற்கடிப்பதற்கு பல்வேறு போராட்ட உத்திகளும் கையாளப்பட்டன. இதில் வியட்நாமிய பௌத்த துறவிகள் உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கும் பாத்திரமாற்றினர். தம்மைத்தாமே தீயிட்டுக் கொளுத்தி தற்கொலை செய்து கொண்டதன் ஊடாக ஏகாதிபத்தியத்திற் கெதிரான தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

அடக்குமுறைகளை எதிர்க்கும் மக்கள் பல்வேறு வழிகளிலும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றனர். அதிலொரு வடிவமே தற்கொலை.

விடுதலைப் போராட்டத்தில் தம்மை இணைத்துக் கொள்ளும் பெண்களும் ஆண்களும் போர்க்களத்திற்கு செல்லும் போது தாம் அங்கவீனமாகவோ அல்லது வாழ்நாளெல்லாம் முடமாயிருக்கவோ அல்லது மரணத்தை தழுவவோ நேரலாம் என்பதை அறிந்தே போர்க்களம் செல்வதை தமது சுய தெரிவாகக் கொள்கின்றனர். இதுவும் ஒருவகை தற்கொலை தானே. அரசியல் கிளர்ச்சியாளர்கள், புரட்சிகர பத்திரிகையாளர்கள்கூட தாம் படுகொலைக்குள்ளாவோம் என்பதை அறிந்தே உள்ளனர். அமைதியாக ஆர்ப்பாட்டம் நடாத்தும் மக்கள் மீத இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்யும் சம்பவங்கள் ஏலவே நடந்திருந்தும் மீண்டும் மீண்டும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு நிராயுதபாணிகயாக மரணத்தை எதிர்கொள்ளும் மக்களது, எதிர்ப்புணர்வில் மரணத்திற்கு சவால்விடும் தற்கொலை உணர்வு இல்லையா?

சீதனக் கொடுமையால் எத்தனை பெண்கள் தற்கொலை செய்துகொண்டுள்ளனர்? கடன்பட்டு சீதனம் கொடுத்ததால் நலிந்து போன பெண்ணின் தாய், தந்தை, சகோதரங்கள் என குடும்பங்களாக தற்கொலை செய்து கொண்ட சம்பவங்களை நமது சமூகத்தில் எதிர்கொண்டிருக்கிறோம். பட்டினியால் தற்கொலை செய்துகொண்டவர்கள்... தமது பிள்ளைகள் பசியால் துடிப்பதை பார்க்க சகிக்காது தற்கொலை செய்து கொண்ட பெற்றார்... இவை நமது தேசத்தில் மாத்திரமல்ல சிங்கள தேசத்திலும் நிலவும் பொதுத் துயரங்களாகும்.

விவசாய உற்பத்தி பொருளுக்கான விலைவாசி வீழ்ச்சி காரணமாக சிங்கள தேசத்து விவசாயிகளின் தற்கொலை வீதாசாரம் இன்று விவாசியிகள் பிரச்சனையாக அடையாளப்படுத்தப்படுகிறது.

இம்மக்கள் அனைவரும், சமூகத்தின் ஆதிக்கம் செலுத்தும் - அதிகாரத்தை தங்கள் கைகளில் வைத்திருக்கும் தரப்பால் தம்மீது இழைக்கப்பட்ட அநீதிகளுக்கான தமது எதிர்ப்பை தம்மைத் தாமே அழித்துக்கொள்வதன் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர். இப்படியாக, சமூக அநீதிக்கெதிரான இவர்களது எதிர்ப்பு தற்கொலையுடன் மட்டுப்படுத்தப்பட்டாலும், இந்த சமூகத் தற்கொலைகள் அனைத்திலும் அடங்கியுள்ள அதிகாரமின்மை, வறுமை ஆகிய அரசியலை யாரும் நிராகரித்திட முடியுமா?

இவற்றைப் போன்றதே எதிர்ப்பு அரசியலின் வெளிப்பாடான தற்கொலைத் தாக்குதல் போராட்டமும்.

எதிரிக்கு பாதிப்பில்லாது தன்னை அழித்துக் கொண்டு தனது எதிர்ப்பை தெரிவிக்கும் வழிமுறையாயினும், எதிரிக்கு அழிவை ஏற்படுத்திட தன்னை அழித்துக் கொள்ளும் வழிமுறையாயினும் இரண்டுமே விடுதலை கோரி போரிடும் மக்கள் மத்தியிலிருந்து வெளிப்படும் எதிர்ப்புணர்வாகும். அவ்வகையில், தனிநபரதும் சமூகத்தினதும் அரசியல் உணர்வின் ஒன்று கலப்பாக தற்கொலைப் போராட்டத்தை நாம் காண முடியும்.



எனினும் சிறிலங்காவிலும் இந்தியாவிலுமுள்ள “சமூகவியலாளர்கள்”, “பெண்ணியர்கள்”, “ஜனநாயகவாதிகள்” என தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும் சில புத்திஜீவிகள் நமது விடுதலைப் போராட்டத்தில் நிலவும் தற்கொலைப் போராளித் தாக்குதல் குறித்து மிகவும் எதிர்மறையான கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றனர்.

தற்கொலை தாக்குதல் பற்றிய தமது எதிர்வாதத்தை இவர்கள் பூர்ஷ்வா சட்டத்திலிருந்தே தொடங்குகின்றனர். மனிதர்கள் சமூக ஜீவிகள் எனும் வகையில் மனித உயிர் சமூகத்திற்கு உரித்தானதாகும். தனிமனிதருக்கும் சமூகத்திற்குமிடையிலான இந்த உயர்ந்த தளத்திலான இணைவை தனது உடமைவாத கண்ணோட்டத்தின் அடிப்படையில் குறுக்கிவிட்டுள்ள முதலாளித்துவ அமைப்பு, சமூகத்திற்கு சொந்தமான உயிரை மாய்த்துக் கொள்வது குற்றம் எனும் சட்டத்தை இயற்றி அதற்கு தண்டனைகளையும் உருவாக்கி வைத்துள்ளது. ஆனால் தற்கொலைகளுக்கு பின்னால் உள்ள சமூகக் காரணங்களை அது மறைத்து விடுகிறது.

இந்த புத்திஜீவிகளோ இந்த முதலாளித்துவ சட்டமுறைமையை எந்தவித மீளாய்வுக்கும் உட்படுத்தாது அதை அப்படியே உள்வாங்கிக் கொண்டு, தற்கொலைப் போராளித் தாக்குதலை முதலாளித்துவ சட்டத்துடன் தொடர்புபடுத்தி, தற்கொலை என்பது சட்டரீதியான குற்றம் என நிறுவ முயல்கின்றனர். இதனூடாக தற்கொலைப் போராளிகளையும், ஒட்டுமொத்த போராட்டத்தையும் குற்றவாளிகளாக்குவதே இவர்களது நோக்கமாகும்.

அடிப்படையில் தற்கொலைப் போராட்டம் பற்றின தயக்கமான பார்வையிலிருந்துதான் இத்தகைய எதிர்க்கருத்தாக்கங்கள் ஆரம்பிக்கின்றன.

ஆனால் இன்று இத்தகைய சட்டத்தை உருவாக்கிய மேற்கத்தைய சமூகமே, தற்கொலை பற்றிய தனது இறுக்கமான சிந்தனைப் போக்கில் நெகிழ்ச்சியைக் கொண்டு வருகிறது. நோய் உபாதை தாங்க முடியாது தற்கொலை செய்து கொள்வது மேற்கில் நடைபெறுகிறது. இது பற்றி நேர்மறைக் கருத்துப் போக்கு அங்கு வெளிப்படவும் தொடங்கியுள்ளது. எனவே இங்கு இந்த புத்திஜீவிகள் தாம் தொடங்கும் புள்ளியிலேயே சறுக்கி விடுகின்றனர்.

போராட்டத்தில் பங்கேற்பவர்கள் தமக்கு ஏற்படக்கூடிய இழப்புகளைப் பற்றி நன்குணர்ந்து தான் சுயமாக தம்மை போராட்டத்தில் இணைத்துக் கொள்கின்றனர். தற்கொலைப் போராளியும் தனது பாத்திரத்தை சுயமாகவே தெரிவு செய்கிறார். தற்கொலைப் போராட்டத்திற்கு தம்மை தயார் செய்யும் காலப்பகுதியில் (இத்தயாரிப்புக் காலம் சில வருடங்களுக்கும் நீடிக்கும்) அவர்களுக்கு பல்வேறு தெரிவுகளும் தாராளமாகவே கிடைக்கின்றன. போராட்ட வாழ்வை துறந்து செல்வதற்கான வாய்ப்புகள் மற்றும் சூழல் அவர்களுக்குண்டு. இவ்வாறு தாம் ஏற்றுக்கொண்ட செயற்பாட்டை துறந்து சென்றவர்களும் உள்ளனர். அவ்வகையில், தற்கொலைப் போராளிகள் ஏதோ அப்பாவித்தனமாக, ஒன்றுந்தெரியாதவர்களாக, பலிகடாக்களாக இயங்குகிறார்கள் என்பது போராடும் மக்களது உணர்வைப் புரிந்துகொள்ள முடியாதவர்களது அப்பாவித்தனத்தையேக் காட்டுகிறது.

அடக்கப்படும் மக்களது உணர்வுடன் இணைந்து போராட்டத்தை எதிர்கொள்ளாது, அடக்கும் தரப்புடன் (சிங்கள இனவெறி அரசு மற்றும் சோவினிச சித்தாந்தம்) கூட்டு சேர்ந்திருப்பவர்களால் போராளிகளின் உயர்ந்த போர்க்குணாம்சத்தையும், மக்களது விடுதலை வேட்கையையும் புரிந்துகொள்ள முடியாது. மாறாக, இவர்கள்

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சக தேசங்களின் வாக்குகள்: சிங்கள சோவினிசத்துக்கு எதிராக...

சிங்கள சோவினிச பாராளுமன்றத்தை மீளவும் புதுப்பிப்பதற்கான தேர்தல் அண்மித்துவிட்டது. தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் வாக்குகளைப் பெற்று தமது சிங்கள ஆட்சியை மீள நிறுவுவதற்கு இனவாத அரசியல் சக்திகள் தயாராகிவிட்டனர். பல்வேறு வாக்குறுதிகளையும் தம்மால் அடக்கப்பட்டுவரும் தேசத்தினரான எம்மைப் பார்த்து அள்ளி வீசுகின்றனர். இன, மத முரண்பாடுகளை "தீர்த்து" "அமைதியை" ஏற்படுத்தப்போவதாக எமக்கு உறுதிமொழி கூறுகின்றனர்.



எத்தனையாவது தடவையாக இவர்களது உறுதிமொழிகளை நாங்கள் சந்ததிசந்ததியாக கேட்டு வருகிறோம். 1915இல் முஸ்லிம் மக்கள் மீது இனவன்முறையை கட்டவிழ்த்துவிட்டதன் மூலம் முஸ்லிம்கள் மீது அடக்குமுறைகளை ஆரம்பித்துவைத்த இனவெறி அரசியல் சக்திகள் அதே முஸ்லிம் மக்களது வாக்குகளை தமக்கு சாதகமாக்கிக் கொண்டுதான் இன்றுவரை அரசியல் நடாத்தி வருகின்றனர். 1947இல் மலையக மக்களது குடியுரிமையைப் பறித்து அவர்களை நாடற்றவர்களாக்கி தேசிய அடக்குமுறையை திணித்தவர்கள், இன்று மலையக மக்களின் வாக்குகளை பாராளுமன்றத்தில் தமது பெரும்பான்மைப் பலத்துக்காகப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

சிறிலங்கா அரசின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருக்கும் அனைத்து தேசங்களுக்கும் தாமே ஏக பிரதிநிதிகள் என யு.என்.பி, சுதந்திரக் கட்சி அடங்கலான சிங்கள சோவினிச அரசியல் சக்திகள் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். சிங்கள தேசத்தில் இனவெறி சித்தாந்தத்துக்குப்பலியாகிப் போனவர்கள் வேண்டுமானால் இந்த அக்கிரமக்காரர்களை தமது பிரதிநிதிகளாகக் கொண்டிருக்கட்டும். இவர்களால் காலங்காலமாகப் பாதிக்கப்பட்டுவரும் மக்கள் சமூகங்களான நாங்கள் (தமிழ், முஸ்லிம்,மலையக மக்கள்) எப்படி இவர்களை நமது பிரதிநிதிகளாக ஏற்பது? எமது வாக்குகளை இந்த சோவினிஸ்ட்டுகளுக்கு அளித்து இவர்களை தொடர்ந்தும் ஆட்சியில் வைப்பது எம்மை அழிப்பதற்கான இரத்த வெறியர்களை நாமே தெரிவு செய்வதாக அல்லவா அமைகிறது?

மூன்று தலைமுறைகளாக அடக்கப்பட்டுவரும் தேசங்களான நாம் பச்சைக்கு அல்லது நீலத்துக்கு என மாறிமாறி வாக்களித்து ஏமாந்துபோவதுதான் நமக்கான கசப்பான வரலாறாயுள்ளது. நீலத்தின் அடக்குமுறை தாங்க முடியவில்லை என பச்சைக்கு வாக்களித்தால், அது திட்டமிட்டு உயிர்குடிக்கிறது. அதிலிருந்து மீள மீண்டும் நீலத்தை ஆட்சியில் அமர்த்தினால் அதுவோ இரத்தக் காட்டேறியாக நமது குரல்வளை நெறிக்க துடித்துக் கொண்டிருக்கிறது. இப்படியாக, நமது வாக்குகளால் ஆட்சிக்குவரும் இப்பிரதான கட்சிகள் இரண்டும் நிறங்களாலும் ஆட்களாலும்தான் வேறுபடுகின்றனவேயன்றி அவற்றின் பண்போ எவ்விதத்திலும் மாறுபட்டதல்ல.

இவ்விரு கட்சிகளதும் தேர்தல் விஞ்ஞாபனங்களை எடுத்துப் பார்ப்போம். எங்காவது ஒரு வரியிலாவது இவர்கள் தெரிவித்திருக்கிறார்களா நாட்டில் இனவெறியை முடிவுக்குக் கொண்டுவருவதாக... அல்லது குறைந்தபட்சம் சோவினிச சக்திகளின் வளர்ச்சியை கட்டுப்படுத்துவதாக....? கூறமாட்டார்கள் ஏனெனில் அவர்கள் வாழ்வது, அவர்களது அதிகாரம் கட்டமைக்கப்பட்டிருப்பது எல்லாமே இனவெறியின் மீதுதான். இனவெறியை எம்மீது தொடர்ந்து பிரயோகிப்பதில்தான் இவர்களது இருத்தலே தங்கியுள்ளது. இவர்களில் யார் ஆட்சிக்கு வந்தாலும் இனவெறி மேலும் மேலும் வளர்ச்சி பெற்று புதியவடிவங்களை எடுக்குமேயன்றி குறையாது. அதன் மறுபுறம் நமது இருத்தல் மேலும் மேலும் கேள்விக்குள்ளாக்கப்படும்.

சிங்கள இனவாதிகளின் அடக்குமுறைகளை அன்றாடம் பல்வேறு வடிவங்களிலும் எதிர்கொண்டு வரும் அடக்கப்பட்ட தேசங்களான நாம் எம்மை அடக்கி அழித்தொழித்திடும் சிங்கள சோவினிச சக்திகளுக்கு நமது வாக்குகளை அளிக்காதிருப்போம். அடக்கப்பட்ட தேசங்களான நாம் நமது வலிமையை சிங்கள சோவினிஸ்ட்டுகளும் அவர்களுக்கு சார்பான சர்வதேச ஆதிக்க சக்திகளும் உணர்ந்திடச் செய்வோம்.

-சியா

## மக்கள் களம்

அன்புடையீர்

தங்களின் வெளியீடான தமிழீழம் மாதச் சஞ்சிகையை ஓரிரு இதழ்கள் படிக்கக் கிடைத்தன. நடுநிலைக் கருத்துகள் தமிழீழத்தை வெற்றிப் பாதையில் இட்டு செல்லும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஒரு பக்க கருத்துகளை மக்கள் மத்தியில் திணிக்க முயலும் பத்திரகை வரிசையில் தமிழீழம் சற்று விலகி நின்று நடுநிலைக் கருத்துகளால் மக்களை கவர எடுக்கும் முயற்சிகள் தக்க பலனைக் கொடுக்கும். என் போன்றோர்களுக்கு தமிழீழம் ஒரு தரமான சஞ்சிகை. உண்மையினை உள்ளவாறு உலகுக்கு எடுத்து செல்லும் ஒரு ஊடகம் என்றால் அது மிகையாகாது. எனவே தமிழீழம் தொடர்ந்தும் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் நிலைத்திருக்க எனது பிரார்த்தினைகள்.

பாருக்- துபாய்

அன்புடையீர்

வணக்கம் தங்கள் கடிதம் கிடைத்தது. இக்கடிதம் தாமதமாக எழுத நேர்ந்துவிட்டது. பத்திரிகையின் சைஸ் பற்றிக் கேட்டிருந்தீர்கள் தபாலில் அனுப்ப வேண்டியிபதால் இப்போதைய அதன் உருவமே சிறந்தது. பொதுவாக இங்குள்ள அரசியல் மற்றும் சமூகப் பிரச்சைகளில் நேரடியாக ஈடுபடாமல் ஒதுங்கியிருப்பவன் நான். காரணம் அதை விட ஆழமான விஷயங்களோடு அதை அணுகுவதாலேயே அத்தளங்களில் பலன் கிடைக்கும் என்பது தான். தமிழிழமோ அரசியல் கொதிநிலையடைந்துள்ள பின்னணியில் வருகின்றது. ஆகவே அதை எவரும் கவனிக்காமல் இருக்க முடியாது. ஆனால் போர் வன்முறை, பெண்ணியம், சுதந்திரம் ஆகிய நிலைப்பாடுகளில் நான் எதிர் பார்க்கும் ஆழமான தளத்திலிருந்து அவைகள் விவாதிக்கப்படுவது பிடித்துள்ளது.

உங்கள் இயக்கம் வெற்றிபெற எனது வாழ்த்துகளையும் அன்பையும் ஏற்றுக் கொள்ள வேண்டுகின்றேன்

அருள்-தூத்துக்குடி

உழைப்போம்! உரைப்போம்! மக்களுக்கே!

தமிழீழம் நண்பர்களுக்கு, வணக்கம்.

தமிழீழம் இதழை முதல் இதழ் முதல் படித்து வருகிறேன். ஈழவிடுதலை என்ற வரலாற்றுக் கட்டாயம் பெற்றெடுத்த பல இயக்கங்களைப் பார்வையாளர்களாக இருந்து தமிழ் நாட்டு மக்கள் கண்டிருக்கிறார்கள். அதன் தொடர்ச்சியாக தங்களது தமிழீழ மக்கள் கட்சி மெல்ல அறிமுகமாகிறது.

தனிமனிதத்தலைமை வழிபாட்டிற்கும், திரைப்படத்தனமான சாகச மயக்கத்திற்கும் பேர்போன நாங்கள், எங்கள் தலைவர்கள் சில நாட்கள், சில மாதங்கள் சிறையிலடைபட்டதையே பெரும் தியாகமாக கருதி வியந்தவர்கள் நாங்கள். தமிழ்க் காப்புப் போரில் (1965ல்) தங்கள் உயிரை நெருப்பில வார்த்த சில தீக்குளிப்புச் செயற்பாடுகளே எங்கள் உச்சபட்ச வீரம் காட்டும் வழிமுறையாக இருந்தது. அத்தகைய எங்கள் கண்களில் உங்கள் இளைஞர்கள் (நம் இளைஞர்கள்) கண்களில் நெருப்புமிழ விடுதலை போராளிகளாய் எங்களுடன் அறிமுகமாகையில் உண்மையில் புல்லரித்துதான் போனோம். எல்லா இயக்கப் போராளிகளும் எங்களது பல்வேறு சமூக பிரிவினராலும் அன்பொழுக ஆதரிக்கப்பட்டார்கள். அவர்களில் குறிப்பாக "பொடியன்கள்" எங்கள் வீட்டுச் சொந்த பிள்ளைகளாயினர். எத்தனையோ கருத்துபொய் பிரச்சாரங்கள் எம்முன் அவிழ்த்துவிட பட்டபோதும் இந்த அடிப்படை நேசம் அற்று விடவில்லை. பல்வேறு மா.லெ குழுக்கள் தொடக்கம் முதல் ஈழக் குழுக்களின் பொடியன்களின் பாசிச போக்கு குறித்து எச்சரித்து வந்தாலும், தமிழ்நாட்டு மக்களை பொறுத்தவரையில் அவர்கள் அனைவரும் நேசத்திற்கு உரியவர்களாகவே இருந்தனர். இன்றும் அடித்தட்டு மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, அதிலிருந்து வரும் படித்த இளைஞர்களுக்கு பிரபாகரன் மீது பெருமதிப்பு இருப்பதை அறிய முடியும். இந்தச் சூழ்நிலையில் பொடியன்களின் பாசிச போக்கு குறித்த செய்திகள், நிகழ்வுகள் (இஸ்லாமியர்களின் மீதான தாக்குதல் போன்றவை) நெஞ்சை கனமாக்குகின்றன. கைகளில் வரம்புக்குட்பட்ட அதிகாரத்தை (அதுவும் நிரந்தரமானதல்ல) செயின்ட ஜார்ஜ் கோட்டையில் குடியேறியிருக்கும் திராவிட சீமான்கள் ஆடும் ஆட்டமே இப்படியென்றால் போர்க்கருவிகளோடு உலவும் ஒரு இளைஞர் படை எவ்வாறு இருக்கும் என்பதை உணர முடிகிறது. ஆயினும் இன்றைய தமிழகச் சூழலில் வி.புலிகளின் பாசிசப் போக்கு குறித்து கூறப்படும் சிறு கருத்து கூட ஈழவிடுதலைக்கு உருவாகும் ஆதரவுக்கு வேட்டுவைக்க கூடும். ஆனால் உண்மைகளின் சூட்டில் பொய்கள் எனும் பனிப்படலம் உருகியோடுவது வரலாற்றில் வழக்கம்தான் என்பதையும் உணர்ந்தே இருக்கிறோம்.

தமிழ் நாட்டு மக்கள் என்ன செய்ய முடியும்? என்ன செய்ய வேண்டும்? ஈழச்சிக்கலின் பரிமாணங்களை தமிழக மக்களிடம் கொண்டு செல்வது எவ்வாறு? என்பது போன்ற பல்வேறு சிந்தனைகள் கேள்விகளாய் மொய்க்கின்றன. விடைகாணும் வேட்கையோடு உள்ளோம்.

மீண்டும் மடலில் சந்திக்கும் கனவுத்தோடு

இ. கோவலன்-பொள்ளாச்சி- 25-04-2000



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## ஆசிரியர்கள்...
(4ஆம் பக்க தொடர்ச்சி...)

வாத அடக்குமுறைகள், யுத்த சூழலின் நெருக்கடிகள் எனபவற்றை நாளாந்தம் அனுபவிக்கின்ற நிலையிலுள்ள தமிழ், (முஸ்லிம்) ஆசிரியர்களிடம், தொழில்சார் வன்முறையை ஏற்படுத்த கூடியனவாகவே, மேலதிகாரிகளின் இத்தகைய நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

இவை அனைத்தின் விளைவாக, இறுதியில் பாதிக்கப்படுகின்றவர்கள் மாணவர்களே. பொருத்தமற்ற கல்விமுறையும் ஆசிரியர்களுக்கு ஏற்படுகின்ற பன்முக பாதிப்புகளின் விளைவுகளும் ஈற்றில் மாணவர்களின் கற்றல் செயன்முறையில் கடுந் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. வெற்றிகரமான கற்றல் செயன்முறை என்பது, மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே ஏற்படுகின்ற நெருங்கிய உறவிலும் ஆசிரியர்களின் உணர்வுபூர்வமான வழிகாட்டலிலும் தங்கியிருக்கின்றது. எனினும் ஆசிரியர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளின் காரணமாக, அவர்கள் தமது பாத்திரத்தை முழுமையாகவும் பொருத்தமான முறையிலும் மேற்கொள்ள முடியாதவர்களாக இருக்கின்றார்கள். இதன் விளைவாக, வட, கிழக்கிலுள்ள பெரும்பாலான கிராமப்புற பாடசாலைகளில், மாணவர்களின் கல்விநிலையானது, தீவிர வீழ்ச்சி நிலையை அடைந்துள்ளது.

தமிழ், (முஸ்லிம்) ஆசிரியர்கள் தொழில்ரீதியாகவும் நிருவாக ரீதியாகவும் இன அடக்குமுறையினாலும் நாள்தோறும் அனுபவிக்கின்ற அவமானம், சுமைகள், மனஅழுத்தங்கள், உரிமைமீறல்கள் என்பவற்றின் திரட்சியே, அவர்களின் போராட்டங்களாக வெடித்தெழுகின்றன. தமது பிரச்சினைகளுக்கு தீர்வாக எத்தகைய சாதகமான வெளிப்பாடுகளும் தென்படாதநிலையில், இப்போராட்டங்கள் அடிக்கடியும் தீவிரமாகவும் திரண்டெழுவது தவிர்க்க முடியாததாகின்றது. ஒரு சமூக பிரிவு என்றவகையில், ஆசிரியர்களின் போராட்டம் என்பது, தீர்க்கப்படாத அவர்களின் பிரச்சினைகளை மட்டும் குறிக்கவில்லை, கூடவே, அவர்களுக்குள் கருக் கொண்டுள்ள புரட்சிகர உணர்வையும் வெளிப்படுத்துகின்றது.

சிறிலங்கா அரசின் இனவாத சாரத்தையும் அதன் கல்வி, மற்றும் நிருவாக முறைமையின் அர்த்தமற்ற முட்டாள்தனத்தையும் புரிந்து கொள்வோமாயின், தமிழ், முஸ்லிம் ஆசிரியர்கள் முகம் கொடுக்கின்ற பிரச்சினைகளுக்கான தீர்வு, இன்றைய அரசு மற்றும் நிருவாக கட்டமைப்புக்குள் சாத்தியப்பட கூடியதல்ல என்பது தெளிவாகும். தமிழ், முஸ்லிம் தேசங்களுக்கென சொந்த, ஜனநாயக அரசியல் முறைமையும் ஆசிரியர்களின் நேரடி பங்குபற்றலுடன் கூடிய கல்விமுறைமையும் அவர்களுக்கென உருவாக்கப்படக் கூடிய பொருத்தமான நலன்புரி முறையும்தான் ஆசிரியர்கள் அனுபவித்து வருகின்ற பிரச்சினைகளின் தீர்வுக்கான நிரந்தர அடித்தளமாக அமையும்.

- வரதன்

## அடுத்து வரும்...
(3 ஆம் பக்க தொடர்ச்சி...)

நம்மக்களுக்கு அடிப்படை வசதிகளை செய்து தருவதிலும் போராட்டத்தின்பால் அவர்களின் மனஉறுதியை பேணுவதிலும் சம்பந்தப்பட்ட தரப்புகள் குறிப்பான கவனம் செலுத்துவோம்.

மேற்படி கடமைகளை தேசமாக ஒன்றிணைந்து எதிர்கொள்வோமெனின் எத்தகைய ஆதிக்க சக்திகளும் அவை எவ்வளவுதான் பலமிக்கதாக தம்மைக் காட்டிக்கொண்டாலும், உத்வேகம் கொண்டு போராடும் மக்களின் முன் தோல்வியை தழுவும் என்ற வரலாற்றுண்மையை மறுபடியும் நிரூபிப்போம்.

விடுதலைப்போராட்டத்தை மேலும் மேலும் வெற்றிகரமாக முன்தள்ளுவதிலும் பாதுகாப்பதிலும், அதன் போது நம்மீது மேற்கொள்ளப்படும் அழுத்தங்களை வெற்றி கொள்ளவும் துன்பங்களை தாங்குவதிலும் சேதங்களை புனரமைப்பதிலும் வெற்றிகளை அறுவடை செய்வதிலும் நாம் அனைவரும் கரங்கோர்ப்போம்! கரங்கள் கோர்ப்பதற்கான சூழலை உருவாக்குவோம்!! அதனைச் செழுமையாக்கிப் பேணுவோம்!!! நம் இலட்சியத்தை விரைவில் யதார்த்தமாக்குவோம்!!!!

- விஜி

## தற்கொலை...
(5 ஆம் பக்க தொடர்ச்சி...)

விடுதலை உணர்வின் தீவிரத்தைக் கண்டு மிரள்கின்றனர். தாம் அண்டிவாழும் எஜமானர்களான ஆதிக்க சக்திகளை போராளிகள் தமது இலக்காகக் கொள்வதால் நேரடியாக தமது நலன்கள் பாதிக்கப்படுவது இப்புத்தி ஜீவிகளின் மிரட்சிக்கு காரணமாகும். இந்த நலன்சார் மிரட்சிதான் இவர்களை எதற்காக இவ்வளவும் நடைபெறுகிறதோ அதனைப் புரிந்துகொள்ள விடாது, இந்த அநியாயங்களுக்கு காரமானவர்களுடன் இணைந்து போராட்டத்திற்கு எதிராக செயற்பட செய்கிறது.

மக்கள் பற்றிய சிந்தனையில் குறுகிய, சுயநலமிக்க பண்பைக் கொண்டுள்ள இந்த புத்திஜீவிகள், தாம் பலமான சமூக நிலையில் இருப்பதாக எண்ணிக் கொண்டு, போராளிகளுக்காக பரிதாபப்பட்டும் இரந்து பேசியும் வருவதைக் கைவிட்டு, தாம் காலூன்றியிருக்கும் புதைமணற்குதிரின் நிச்சயமற்ற தன்மையைப்பற்றி சிந்திப்பது நல்லதல்லவா?

- சுபத்திரா

## ஓரணி திரண்டு...
(இரண்டாம் ஆம் பக்க தொடர்ச்சி...)

அனைத்துவிதமான ஒடுக்குமுறைகளையும் இன்னும் நீடித்துக் கொண்டு, (பயங்கரவாதச் சட்டத்தை நீடிப்பதற்காக, கலைக்கப்பட்ட பாராளுமன்றத்திற்கு சில நாட்களுக்கு மீளவும் புத்துயிர்கொடுத்து) எம் தேசத்தின் மீது போரைத் தொடர்ந்து நடாத்திக் கொண்டு, இத்தேர்தலைப் பயன்படுத்தி சிறிலங்கா அரசு, உலகுக்கு "ஜனநாயகப் படம்" காட்டுகின்றது. விடுதலைப் போராட்டத்திலிருந்தும் அதன் இலக்கிலிருந்தும் நமது மக்களையும், நமது மக்களை விட்டு விடுதலைப்போராட்ட சக்திகளையும், குறிப்பாக விடுதலைப்புலிகளையும் தனிமைப்படுத்திட திட்டம் சமைத்துள்ளது. இத்தேர்தலைக் கொண்டு, எமக்கெதிரான சர்வதேச அபிப்பிராயத்தை வென்றுகொள்ளவும் சிறிலங்கா அரசானது கனவு காண்கின்றது.

எனவே இந்த சதியை நாம் முறியடிக்க வேண்டும்! ஒரு தேசமாக ஒன்று திரண்டு முறியடிக்க வேண்டும்! எவ்வாறு?

ஆம், 1977ம் தேர்தலை - அதன் பின்பு நடைபெற்றவை தேர்தல்களே அல்ல, மாபெரும் மோசடிகளாகும்- அதில் பங்கு கொண்டு நமது தேசிய நோக்கங்களுக்கு பயன்படுத்திக்கொண்டது போல, இத்தேர்தலை நாம் பங்குகொள்ளாது நிராகரிப்போம். பகிஸ்கரிப்போம். அதனூடாக, இத்தேர்தலுக்கும் எமக்கும், எமது தேசத்திற்கும் சிறிலங்கா அரசுக்கும் அதன் பாராளுமன்றுக்கும் எவ்வித சம்பந்தமில்லை என்பதையும், நமது இலட்சியமெல்லாம், விடுதலைப் போராட்டத்தில் இறுதி வெற்றியை பெறுவதுதான் என்பதையும் நாம் வெளிப்படுத்துவோம்.

நமது தேசிய அபிலாசைகள் என்பது, இந்த அடக்குமுறை சாதனமான "வெற்றுக்குடுவையான" பாராளுமன்றத்தில் சில ஆசனங்கள் பெற்று விலைபோவது அல்ல என்பதை சக சமூகங்களுக்கும் சர்வதேசத்திற்கும் உறுதிப்படுத்துவோம். இதன் மூலமாக சிறிலங்கா அரசினதும் மற்றும் அதற்கு ஆதரவாக அணிதிரண்டு நிற்கும் ஆதிக்க அரசுகளினதும் அரசியல் சதிகளுக்கு அகப்பட மாட்டோம் என்பதை நிரூபிப்போம். எனவே, இந்த தேர்தலை நாம் ஒரு தேசமாக, ஒட்டுமொத்தமாக அணிதிரண்டு நிராகரிப்போம்.

இதற்கு மேல் இப்படியான தேர்தல் ஒன்று தமிழீழத்தில் நடைபெறுவது அவசியமில்லை. நம்மீது திணிக்கப்படும் கடைசித் தேர்தல் இதுவாக இருக்கட்டும் என்ற பிரதான கண்ணியைப் பற்றிக்கொண்டு, இதனை நாம் அவர்களுக்கு எதிராக திருப்புவோம். அதுமட்டுமல்ல, நமது தேசத்தின் முடிவான எண்ணம், அபிலாசைகள் சுயநிர்ணயம், இறைமை என்னவென்பதையும் இதற்கு ஊடாக வெளிப்படுத்துவோம்.

அது மட்டுமல்ல, போராட்டம், தாயகம், தமிழ்தேசம், சுயநிர்ணய உரிமை, திம்பு என வெளியில் "வாய்ச்சவாடல்" செய்துகொண்டு, ஒரு சில ஆசனங்களுக்கும், அரச சுகபோகங்களுக்குமாக இத்தேர்தலில் பங்குகொள்ள முனையும் ஈழத்தமிழர் எவராயினும் நமது தேசிய அரசியலுக்கும் அபிலாசைகளுக்கும் அவர்கள் துரோகம் இழைக்கின்றார்கள் என்பதையும், எதிரிகளுக்கு துணைபோகின்றார்கள் என்பதையும், இப்படிப்பட்டவர்கள் நமது வாக்குகளை கொண்டு நமது பிரதிநிதிகளாக தெரிந்தெடுக்கப்படவில்லை என்பதையும், அவர்கள் விலைகளும் சலுகைகளும் திருட்டு வாக்குகளும் கொடுத்து வாங்கபபட்டவர்களே என்பதையும் நாம் வெளிப்படுத்துவோம்.

அப்படித் தமக்கும் ஈழத்தமிழர் சார்பில் அரசியல் செய்யும் உரிமைகள் உள்ளது. அந்த உரிமையை எவரும் பறிக்க முடியாது என தமிழர் தரப்பில் எவரேனும் இன்னமும் வாதிட்டால், அவர்கள் இந்த தேர்தல் மேடைகளில், ஈழத்தமிழர் தனியானதும் இறைமை கொண்டதுமான தேசம், அதற்கு சுயநிர்ணய உரிமை உண்டு, எமக்கென தாயகம் உண்டு என்ற அடிப்படையான கோரிக்கைகளை முன்வைத்து வாக்குக் கேட்டுப் பார்ப்பார்களா? கொஞ்சமாவது அவர்களுக்கு, அரசியல் சொரணை இருக்குமாயின், அதனை அவர்கள் இப்படி நிரூபித்துக்காட்டட்டும். இரட்டைவேடம் போடும் தமிழர்விடுதலைக்கூட்டணியையும், விலைக்கு வாங்கப்பட்டு, தமிழர் வாக்குகளை பிரித்துவிட இறக்கி விடப்பட்டிருக்கும் பல்வேறு 'சுயாதீனக்'-குழுக்களையும் நம்மக்கள் அறியமாட்டார்களா என்ன?

ஈழத்தமிழ்தேசமே! இன்றுள்ள நிலையை ஆழமாய் புரிந்து கொள்வோம். எதிரியின் தேர்தல் சதிவலையை கிழித்தெறிவோம். எதிரியுடன் கை கோர்த்து நம் தேசத்தை விலைபேசும் துரோகஅரசியல் குழுக்களை துச்சமாக்குவோம். இந்த உக்கிரமான கட்டத்தில் அற்ப சலுகைகளால் எம்மை திசை திருப்பிவிடலாம் என்ற எதிரிகளின் கற்பனைகளை தகர்த்தெறிவோம். இதனை நிரூபிக்க நாம் இந்த தேர்தலை நிராகரிப்போம். நம் நீண்ட போராட்ட வரலாற்றில் ஒவ்வொரு கட்டத்திலும் நமது தேசத்திற்கு எது அவசியம் என்பதை நமது தேசம் தெளிவாகவே நிரூபித்துள்ளது. இம்முறையும் நம்சக்தியை மீளநிரூபிப்போம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழீழம்

'The Editor'
BM Box 4002
London. WC IN 3XX
United Kingdom

www.thamileelam.org
info@thamileelam.org

## தேசமாக ஓரணிதிரண்டு தேர்தலை நிராகரிப்போம்!

சிறிலங்காவில் நடைபெறும் தேர்தலுடன் எவ்வித தொடர்புமற்ற தமிழீழ மக்களான நம்மீது சிங்கள அரசு தனது தேர்தலைத் திணிக்கிறது. எம்மீது போர்ப் பிரகடனத்தை மேற்கொண்டு, போரை நாளாந்தம் நடாத்திக் கொண்டு, ஒவ்வொரு கணமும் போராடிக் கொண்டிருக்கும் தேசத்துடன் சம்பந்தமற்ற தேர்தலில் பங்குபற்ற சிங்கள அரசு நம்மைக் கட்டாயப்படுத்துகிறது.

இத்தேர்தலை "தமிழர் பிரச்சனையை தீர்ப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாக" தான் எடுத்துக் கொண்டிருப்பதாக சந்திரிகாவின் சோவினிச அரசு பிரஸ்தாபிக்கிறது. இதற்காக அது, தன்னால் இன்றுவரை குறைந்தபட்சம் பாராளுமன்றத்தில் கூட பெரும்பான்மையானோரின் ஆதரவை வென்றுகொள்ள முடியாது போயுள்ள, கவைக்குதவாத "தீர்வுத் திட்டமொன்றை" முன்வைத்துள்ளது. இதனூடாக, தான் மீள ஆட்சிக்கு வருவது "தமிழர் பிரச்சனையை தீர்ப்பதற்கு" இன்றியமையாதது, அதற்கு தேர்தலில் தமிழர் தனக்கு வாக்களிப்பதும் இன்றியமையாதது எனும் மாயையை சர்வதேச சமூகத்தின் பார்வையில் ஏற்படுத்தி வருகிறது.

இந்த இனவெறி அரசின் சதித் திட்டங்களுக்கு தமிழீழ மக்களான நாம் ஏமாறாதிருப்போம். நம்மைப் பொறுத்தவரையில் தேர்தல் என்பது நம்மீது பிரகடனப்படுத்தப்பட்டுள்ள யுத்தத்துடன் சேர்ந்து வலியத் திணிக்கப்படும், நமது தேசத்தின் விடுதலைப் போராட்டத்தின் பாலான கவனத்தை திசைதிருப்ப முயலும் ஒரு மாயையாகும். நமது விரல்களாலேயே நமது கண்களைக் குத்தச்செய்யும் இந்தத் தேர்தலை தேசமாக ஒருமித்து நாம் நிராகரிப்போம்.

நாம் இத்தேர்தலில் பங்குபற்றுவது, வாக்களிப்பது என்பது இதுவரை காலமும் நமது தேசம் சிந்தியுள்ள இரத்தத்தையும் நம்மவர்களின் உடலங்களையும் கடந்து சென்று வாக்களிப்பதாகும். அவ்வகையில் இத்தேர்தலை நாம் முற்றிலும் நிராகரிப்போம்.

சிங்கள சோவினிசத்தால் அடக்கப்படும் சக தேசங்களான மலையக, முஸ்லிம் தேசங்கள், அடக்கப்பட்ட தேசங்களின் இருப்புக்கு அச்சுறுத்தலாக வளர்ச்சி பெற்றுவரும் சிங்கள பாசிசத்தின் காவலர்களான சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி அடங்கலான அனைத்து சோவினிச சக்திகளுக்கும் வாக்களிக்க வேண்டாம் என தமிழீழ மக்கள் கட்சி கேட்டுக்கொள்கிறது. இதனூடாக அடக்கப்பட்ட தேசங்களான நாம் சோவினிசத்துக்கெதிரான நமது ஒருமைப்பாட்டை நமது எதிரிகளுக்கு உணர்த்துவோம்.

தேர்தலை ஈழத்தமிழரான நாம் நிராகரிப்பது நமது அனைத்து அக்கறைகளையும் ஒன்று குவித்து நமது விடுதலைப் போராட்டத்தில் நாம் மேலும் தீவிரமாக ஈடுபடுவதற்காகவே!

ஆனையிறவு வெற்றியானது தமிழீழ குடியரசு அமைவதற்கான அடித்தளத்தை உறுதிப்படுத்தியது. இதனால் அரண்டு போன இந்திய, அமெரிக்க ஆதிக்க சக்திகள் சிங்கள இனவெறி அரசுக்கு உதவிட ஓடிவந்தனர். ஆதிக்க சக்திகள் ஓரணி திரண்டனர். இன்று இந்த சர்வதேச ஆதிக்கக் கூட்டு நமது போராட்டத்தை அழித்தொழிப்பதற்காக சிங்கள இனவெறி அரசுக்கு பலவழிகளிலும் உதவி வருகிறது.

இந்நிலையில், நாம் மேலும் வெற்றி நோக்கி முன்னேற முன்னேற ஆதிக்க சக்திகளின் கூட்டும் நமக்கெதிராக தம்மை வலுப்படுத்திக்கொண்டு நமக்கெதிரான தீவிரமான செயற்பாட்டை முன்னெடுக்கும். இன்று சிங்கள அரசுக்கு பௌதீகமனோரீதியான ஒத்தாசைகளை வழங்கி அதை பலப்படுத்தும் இந்த சக்திகள், நமது வெற்றியை நசுக்குவதற்காக தாமே நேரடியாக நமக்கெதிராக போர்தொடுத்தால் கூட ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

நமது தேசம் அடைந்திடும் வெற்றிகளை தொடர்ச்சியாகப் பாதுகாப்பதற்கு தேசத்தின் அனைத்துப் பிரிவினரும் போராட்டத்தில் அணிதிரள்வது அவசியம். போராட்டத்தில் மக்களின் ஒன்றுகலப்பானது போராட்டத்தையும் மக்களையும் போராட்டத் தலைமையையும் பிரித்திட முடியாததாக்கும். இத்தகைய நிலைதான் நமது போராட்டத்திற்கு இன்று தேவை.

இதற்காக மாணவர்கள், பெண்கள், உழைக்கும் பிரிவினர் . . . என மக்களின் அனைத்து சமூக சக்திகளும் தமக்கான அமைப்புகளை உருவாக்கி, தமது குறிப்பான சமூக அடையாளங்களுடன் போராட்டத்தில் அணிதிரள்வதும் தேசத்தின் ஒருமைப்பாட்டை கெட்டிபடுத்துவதும் அவசியமாகும்.

மக்கள் தம்மை அமைப்பாக்குவதற்கும் போராட்டத்தில் அணிதிரள்வதற்குமான சூழலை தேசிய விடுதலைப் போராட்டத் தலைமையான விடுதலை புலிகள் உருவாக்கிட வேண்டும். இதற்காக விடுதலை புலிகள் தமது கடந்த கால அணுகுமுறைகளைக் கைவிட்டு தற்போதைய சூழலுக்கேற்ப புதிய முன்னேற்றகரமான அணுகுமுறைகளை மேற்கொள்ள வேண்டும்.

நமது தேசிய ஐக்கியத்தை கெட்டிபடுத்தி நமது அணியை மேலும் பன்முகத் தளத்தில் பலப்படுத்துவதற்காக அனைத்து தேச பக்த சக்திகளும் மக்களும் அணிதிரள்வோம்!

வட அமெரிக்கத் தொடர்புகட்கு:
300 Borough Dr.,
PO Box 47032
Scarborough,On.
M1P 4ZP
Canada

ஐரோப்பியத் தொடர்புகட்கு:
'The Editor'
BM BOX 6769
LONDON
WCI 3XX, U.K.
Tel: 07041372064

## இந்திய மத்திய அரசின் "வேடங்கள்"

இந்திய மத்திய அரசானது மீண்டும் மீண்டும் தனது "நம்பகத் தன்மையை" தனது சொந்த நடவடிக்கைகளாலேயே அம்பலப்படுத்தி வருகின்றது. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை நம்மீது திணித்துடன் எம்மீது நடாத்திய போர் மூலம் ஏற்கனவே அது ஈழத்தமிழருக்கு தனது "குரூர" முகத்தைக் காட்டியிருந்தது. அந்த வரலாற்றை இப்போது மீளவும் ஒருமுறை தீவிரப்படுத்த தொடங்கியுள்ளது.

நமது விடுதலை யுத்தத்தின் இராணுவ சமபல நிலையானது சிறிலங்கா அரசின் பக்கம் அதிகமாக காணப்படும் சந்தர்ப்பங்களில், "இலங்கையில் நடைபெறுவது உள்நாட்டுப்பிரச்சனையாகும்" இதில் இந்தியா அரசு தலையிடமாட்டாதென்ற கொள்கைக் கடைப்பிடிப்பதாகக் காட்டிக் கொண்டது. அவ்வாறு "பகிரங்கமாக" சொல்லிக்கொண்டாலும், சமகாலத்தில் சிறிலங்கா இராணுவ அதிகாரிகளை பயிற்றுவிப்பதிலும், உளவுத்தகவல்களை பரிமாறிக்கொள்வதிலும், பொருளாதார உதவிகளை செய்வதிலும், மூலதனங்களை நகர்த்துவதிலும் "பகிரங்கமற்று" ஈடுபட்டு வந்தது. நாடுகடந்து தமிழகம் வந்த ஈழத்தமிழர்களை கைதுசெய்து சிறிலங்காவின் சித்திரவதையாளர்களிடம் ஒப்படைப்பதிலும், விடுதலைப்புலிகளின் கப்பல்களை தகர்ப்பதிலும், காட்டிக்கொடுப்பதில் ஈடுபடவும் தவறியதில்லை.

எதிர்பாராத வகையில் இப்போது இராணுவ சமநிலைமை நமது தேசத்தின் பக்கம், விடுதலைப்புலிகள் பக்கம் மிக விரைவாகவே மாறிவிட்டது கண்டு, தனியரசுக்கான அத்திவாரம் அமைக்கப்பட்டுவிட்டது கண்டு, இந்திய அரசும் அதன் கொள்கை வகுப்பாளர்களும் திகைத்துப்போயினர். இதன் காரணமாக தற்போது அவசர அவசரமாக புதிதாக கொள்கை வகுத்துள்ளதாகவும், "தான் நடுநிலையாளாக நின்று பிரச்சனையை தீர்க்க தயார்", "ஆனால் தமிழீழம் அமைய கூடாது", "சிறிலங்கா அரசின் இறைமைக்குள்தான் தீர்வு" என்பதாகவும் முன்னிபந்தனை விதிக்கின்றது.

இவ்வாறாக "பகிரங்கமாக" தெரிவித்துக் கொண்டு, கோடிக்கணக்கான பணத்தை "மனிதாபிமான" கடனாகவும் மேலும் பல கோடிகளை "வேறுவகை" கடனாகவும் சிறிலங்கா அடக்குமுறை அரசிற்கு வழங்கியுள்ளது. சிறிலங்காவின் படைத்தளபதிகளுக்கு "பின்வாங்கும் காலங்களின் போதான போர் ஆலோசனைகள்" ஐ வழங்குகின்றது. அழித்தொழிப்பில் சாதனை படைத்த இந்திய பொலீஸ் அதிகாரிகளை சிறிலங்காவிற்கு அனுப்பி வைக்கின்றது. அரசியல் மற்றும் இராஜதந்திர ரீதியிலும் சிறிலங்கா அரசை பலப்படுத்துகின்றது.

விடுதலைப் புலிகளின் கடல்நகர்வுகளை தடைசெய்ய தனது கடற்படையையும் நகர்த்தியுள்ளதுடன், இதற்கெல்லாம் மேலாக, தற்போது மலிவு விலையில், கடற்படைக்கப்பல்களையும், அதனுடன் கூடியதாக தாக்குதிறன் கொண்ட இலகு வானூர்திகளையும் கொடுத்து சிறிலங்கா அரசின் கடற்படைக்கென தனியான புதியவகை வான்பிரிவை உருவாக்கிக்கொடுக்கவுள்ளது. இதற்கான முறைமைகள், ஆலோசனைகள் மற்றும் சாதனங்களை கொடுக்கவுள்ளது. இதற்குப் பிறகும் தான் "நடுநிலையாளர்" எனவும் "இடைநிலையாளராக" இருந்து பிரச்சனை தீர்ப்பதாகவும் இந்தியஅரசு நம்மையும் உலகையும் ஏமாற்ற எண்ணுகின்றது.

ஈழத்தமிழரின் அரைநூற்றாண்டு கால அரசியல்போராட்டத்தையும், கால் நூற்றாண்டு கால இரத்தம் சிந்தும் விடுதலைப்போராட்டத்தையும் ஏதோ சாதாரணமாகன ஒன்றாக, இந்தியஅரசும் அதன் ஆளுங்குழுமமும் கருதிக் கொள்ளுமானால், வரலாற்றில் சரிந்துபோன வல்லரசுகளினதும் ஆதிக்க சக்திகளினதும் அனுபவங்களில் இருந்தும் இவர்கள் கற்றுக்கொண்டது பூச்சியம்தான். ஏன் அண்மைக்கால இந்திய -இலங்கை ஒப்பந்தத்திலிருந்தும் இவ்வொப்பந்தத்தை சிறிலங்கா அரசுக்கு சாதகமாக நமது தேசதத்தின் நலன்களை நசுக்க நடாத்திய ஆக்கிரமிப்பு யுத்தத்திலிருந்தும் அவர்கள் எதுவும் கற்றுக்கொள்ளவில்லை என்றே அர்த்தம்.

இவ்வாறாக அடக்கப்படும் ஒரு தேசத்தின் அடிப்படை உரிமைகள் மற்றும் இறைமை விடயத்தில் இந்தியமத்திய அரசு இரட்டை வேடம் கொள்வதும், தனது நலன்களை திணிப்பதில் குறியாக இருப்பதையும் நீண்டகாலத்திற்கு மறைக்கமுடியாது. மேலும் இவ்வாறான தலையீடுகளுக்கு, அவர்கள் தவிர்க்கமுடியாத பாரிய விலைகளை கொடுக்கவேண்டியும் ஏற்பட்டுவிடுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்